
க்ரைம்
நாவல்
156
ஜூலை - 20
விலை ரூ.5
ராஜேஷ்குமார்
ரத்தத்தில் ஒரு ராத்திரி

# கோயமுத்தூரிலிருந்து...

வணக்கம், அன்புக்குரிய வாசக நெஞ்சங்களே!

நாளுக்கு நாள் உங்களுடைய கடிதங்கள் எனக்கு அதிகமாகிக் கொண்டு வருவதைப் போல் எனக்கு டெலிபோன் செய்யும் வாசகர்களும் அதிகமாகிக் கொண்டே போகிறார்கள். என் வீட்டு டெலிபோன் பதினைந்து நிமிடத்துக்கு ஒரு முறை எப்படியும் வாயைத் திறந்து விடுகிறது. ரிஸீவரை எடுத்தால் 'ராஜேஷ்குமார் ஸார் தானே...?' என்று உரிமையோடு கேட்கும் யாராவது ஒரு வாசகரின் பாசக் குரல். அவர்கள் என் நாவல்களைப்பற்றி இரண்டு நிமிட நேரம் பேசிவிட்டு பிறகு தன் சொந்தப் பிரச்னைகள் பற்றிப் பேசி அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு என்ன என்று கேட்கிறார்கள். சில வாசகர்கள் தங்களுக்குள்ள நோய்களைப் பற்றிக் குறிப்பிட்டு என்ன மருந்து சாப்பிடலாம் என்று கேட்கிறார்கள். ஒரு நல்ல டாக்டரைப் போய்ப் பாருங்கள் என்று சொன்னால் அதை அவர்கள் கேட்பது இல்லை. தலைப் பொடுகு பிரச்னையிலிருந்து நிலத் தகராறு பிரச்னை வரை என்னிடம் ஆலோசனை கேட்கும் என் அன்பான வாசகர்



களுக்கு, என்னுடைய அன்பான ஒரு வேண்டுகோள். இந்த ராஜேஷ்குமார் ஒரு எழுத்தாளன் மட்டுமே. நான் ஒரு டாக்டரோ, வக்கீலோ, போலீஸ் அதிகாரியோ கிடையாது. அந்தந்த பிரச்னைகளை அந்தந்த துறையில் இருப்பவர்களிடம் சொன்னால் தான் உரிய பலனும் தீர்வும் கிடைக்கும். அர்த்தமுள்ள

(தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்)

க்ரைம் நாவல்

க்ரைம் நாவல் - 156 ஜூலை - 2000

## எடிட்டர் ஏரியா




என்ன வாசகர்களே! எப்படி இருக்கீங்க...?

நீங்க சௌக்கியம் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் நான் இங்கு சௌக்கியம். அப்ப நீங்களும் சௌக்கியம்தான்.

நான் எழுதும் இந்த இரண்டு - மூன்று பக்கம் சிலருக்கு சிரிப்பாக இருக்கும்; சிலருக்கு வியப்பாக இருக்கும்; சிலருக்குப் பயமாக இருக்கும்; சிலருக்கு சந்தேகமாக இருக்கும்.

சென்ற மாதம் சத்திய மங்கலத்தில் மதிய

ம் அட்டைத் தொடர்ச்சி)

ட்டை, விளக்கம்
ஸ் விவேக் இந்த
ண்டையும் நான்
துவதால் எனக்கு
லாமே தெரிந்திருக்
என்று வாசகர்கள்
னைப்பது தவறு.
றது உள்ளங்கை
வுதான். எனக்குத்
ரியாத பல விஷ
கள் கடலளவு உள்
. சென்ற மாதம்
வாசகர் இரவு
னோரு மணிக்கு
க்கு போன் செய்து தன்
ாதரி தீ விபத்தில்
ந்து விட்டதாகவும்
த மரணத்தில் தனக்கு
தேகம் இருப்பதால்
லைன உடனடியாய்
ளுடைய கிராமத்துக்கு
து உண்மைக் குற்ற
ரியைக் கண்டுபிடிக்க
வி செய்ய வேண்டும்
றும் சொன்னார். இது
த வாசகர் போலீஸில்
ல்ல வேண்டிய விஷ
இப்படி நிறைய டெலி
ன் கால்கள்.
இனிமே வாசகர்கள்
ங்கக்குவாங்க ஸார்...."
யாரு... இவ்வளவு
துலா பேசறது?"
குருவாயூர் கண்ணன்
."
சிவகங்கை குருவாயூர்

## டிரங்க்கால்

கண்ணன்தானே?"

"ஆமா ஸார்...."

"ரொம்ப நன்றி கண்ணன்..."

"எதுக்கு ஸார்...?"

"நீங்க அனுப்பி வெச்ச 'ரஜினி ராஜ்யம்' புத்தகத்துக்கு"

"இதுக்குப் போய் நன்றி சொல்லணுமா ஸார்?"

"ஆயிரம் தடவை நன்றி சொல்லலாம்..."

"உங்ககிட்ட நான் ஒரு சின்ன கோரிக்கை வைக்கலாமா ஸார்...?"

"பெரிய கோரிக்கையாகவே வைக்கலாம் கண்ணன்"

"இதான் ஸார் கோரிக்கை. விவேக், கோகுல்நாத் இல்லாமே ரூபலா மட்டும்...."

"ரூபலா மட்டும்...?"

"துப்பறிகிற மாதிரி ஒரு நாவல் வேணும்"

"இதுதானே உங்க ஆசை... பிடியுங்க தலைப்பை"

"சொல்லுங்க... சொல்லுங்க..."

**"பத்து விநாடி ஆபத்து."**

"டொக்!"

மிக்க அன்புடன்
**ராஜேஷ்குமார்.**

* இருபது வயது வரை கண்ணும் கருத்துமாய் மகளை வளர்த்துக் காப்பாற்றி வந்த பெற்றோர்களை ஏமாற்றி இருபது நிமிடத்துக்கு முன் பார்த்த பையனோடு ஓடிப்போகும் பெண்ணைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்....? பெற்றவர்கள் மனது எப்படியிருக்கும்...? இப்படிப்பட்ட காதல் தேவைதானா....?

- டி.மாது (காவல்துறை)
பாப்பநாய்க்கன்பாளையம்,
கோவை,

## கண்ணன் புரிந்தால் அது லீலை...



** அய்யோ...! அது தெய்வீக காதலுங்கோ...! இலக்கியத்தில் இடம் பெற வேண்டிய காதலைப் போய் இப்படி இளக்காரமா பேசலாமா...? தப்பு தப்புன்னு சொல்லி ரெண்டு கன்னத்திலேயும் போட்டுக்குங்க....

* விட்டுக் கொடுத்தல் கடினமாக இருக்கிறதே...?

- கதி.அருணாசலம், ஈரோடு.

** விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போனது இல்லை. இது பழமொழி, விட்டுக் கொடுத்தல் கொஞ்சம் கஷ்டமான காரியம் தான். ஈகோ எட்டிப் பார்க்கும். மற்றவர்கள் பார்வைக்கு நாம் தோற்றுப் போனமாதிரி ஒரு உணர்வு ஏற்படும். ஆனால் உண்மையில் வெற்றி பெற்றவர்கள் அவர்களே....! நிரந்தர மற்ற இந்த உலக வாழ்க்கையை தினசரி சில விநாடி நேரம் நினைத்துப்



# ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

பார்த்துக் கொண்டாலே எல்லோர்க்கும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வந்துவிடும். எந்த ஒரு பிரச்னைக்குமே தீர்வு உண்டு. உட்கார்ந்து பேசும் போது வீம்பு இருக்கக்கூடாது. அண்மையில் ஒரு பத்திரிகையில் ஜோக் ஒன்று படித்தேன்.

ஒருவர்: ''நீங்க வீடு கட்டற இடத்துல என்னமோ பிரச்னைன்னு கோர்ட்ல கேஸ் போட்டீங்களே வீடு கட்டினீங்களா...?

மற்றவர்: நான் எங்க கட்டறது... என்னோட வக்கீல்தான் இப்ப புதுசா வீடு கட்டியிருக்காரு.

ஸோ..., வாழ்க்கையில் விட்டுக் கொடுத்தல்கள் இல்லாவிட்டால் பணக் கஷ்டம், மனக் கஷ்டம் இரண்டுமே வந்து சேரும், கோர்ட்டுகள் உயிர்வாழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் விட்டுக் கொடுத்தல் இல்லாததுதான்.

* இப்போதைய அரசியலில் நல்லவர்களே கிடையாதா?

- சு.மு.சுரேஷ், அரைக்கால்கரை.

## நான் செய்தால் அது ஏப்லிங்கா?

** பகல் நேர வானத்தில் நட்சத்திரங்களைப் பார்க்க முடியுமா? பார்க்க முடியும் என்றால் அரசியலில் நல்லவர்களும் இருக்கிறார்கள்.

* விவேக்கின் மகன் பாரத் இப்போது எந்தப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறான்...?

- டாக்டர். வீரலட்சுமி நந்தகோபால். ஈரோடு - 3.

## என்ன மேடம் தெரியாதது மாதிரி கேட்கிறீர்கள்! பாரத் இப்போது பெங்களூரில் அவன் பாட்டி வீட்டில் தங்கி படித்துக் கொண்டிருக்கிறானே... ஐந்தாவது வகுப்பு படிக்கும் பாரத் படிப்பில் நெம்பர் ஒன். கிரிக்கெட்டில் இப்போதே கிங்... செஸ் விளையாட்டில் புலி. எக்கச்சக்க ஐ.க்யூ. விவேக் எட்டடி பாய்கிறான் என்றால் பாரத் பதினாறு அடி பாய்கிறான். பாரத் பிற்காலத்தில் படிக்கப் போகும் படிப்பு எது தெரியுமோ? ஐ.பி.எஸ். ரூபலாவுக்கு அதில் இஷ்டமில்லை. ரூபலாவின் வோட்டு ஐ.ஏ.எஸ். படிப்புக்கு.

# நீங்கள் தப்பித் தவறி பெண்ணாகப் பிறந்திருந்தால்...?

- ராமகிருஷ்ணன், காயக்காடு

## அப்போதும் கதைகள் எழுதிக்கொண்டுதான் இருப்பேன் - ராஜேஷ்குமாரி என்ற பெயரில்.

# கிரிக்கெட் சூதாட்டத்தில் ஒருத்தர்க்கொருத்தர் குற்றம் சாட்டுகிறார்களே...?

- செல்வநேசன், மலைக்கோவிலூர்.

## எல்லோரும் சாக்கடையில் இறங்கியாயிற்று. கைகளில் சேற்றையும் அள்ளியாயிற்று. ஒருத்தர்க்கொருத்தர் தாராளமாய் பூசிக் கொள்ள வேண்டியது தானே. 'உண்மைகள் நாலுகால் பாய்ச்சலில் ஓடிவரா விட்டாலும் ஒற்றைக் காலில் நொண்டிக் கொண்டாவது வந்து விடுமாம்....' என்பது எவ்வளவு பெரிய உண்மை. விளையாட்டுகளில் கிரிக்கெட் தன் பத்தினித் தன்மையை இழந்து சோரம் போய்விட்டது. கிரிக் 'கெட்டு'ப் போச்சு.

# 'நான் கடவுளை நம்புவதில்லை. ஜெயலலிதாவை நம்புகிறேன்' என்று கி.வீரமணி சொல்லியுள்ளாரே!

- எஸ்.ஜெயகாந்தன், புன்செய் புளியம்பட்டி.

## மனிதன் என்று பிறந்துவிட்டால் யாராவது ஒருவரை நம்பித்தான் ஆகவேண்டும். ஆனால் அரசியல் வாதிகளின் நம்பிக்கையைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே...!

# இடுக்கண் களைவதாம் நட்பு என்று சொல்கிறார்



கள். நான் என் நண்பன் ஒருவனுக்கு அவன் பணக் கஷ்டத்தில் இருந்த போது ஜாமீன் கையெழுத்துப் போட்டு ஒரு பேங்கில் பணம் வாங்கிக் கொடுத்தேன். ஆனால் அந்த நண்பர் பேங்குக்கு கட்ட வேண்டிய பணத்தைக் கட்டாமல் ஏமாற்றி விட்டார். இப்போது நான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை எல்லாம் பேங்க்குக்கு கட்டிக் கொண்டிருக்கிறேன். நான் நண்பனுக்கு உதவி செய்தது சரியா தப்பா....?

- டி.கிருஷ்ணகாந்த். பூந்தமல்லி.

## நான் சமீபத்தில் படித்த ஒரு ஆங்கில கட்டுரையின் தலைப்பு என்ன தெரியுமா? SAY "NO' WITHOUT ANY HESITATION. (தயங்காமல் 'நோ' சொல்லுங்கள்) கட்டுரையின் சாராம்சம் இதுதான். யார் எது கேட்டாலும் முதலில் 'நோ சொல்ல பழகிக் கொள்ளுங்கள். காரணம் மனிதாபிமானம் இல்லாத சமுதாயம் இது. தொண்ணூறு சதவீதம் பேர் ஏமாற்றுப் பேர்வழிகள் என்கிறது அந்தக் கட்டுரை. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இரண்டு பேர் இருக்கிறார்கள். அதில் ஒருவன் கெட்டவன். இன்னொருவன் நல்லவன். நல்லவன் உள்ளேயே பதுங்கிக்கொள்ள, கெட்டவன் மட்டும் வெளியே வருகிறான். முன்பெல்லாம் மனச்சாட்சிக்கு பயப்பட்டார்கள். இப்போது அந்த பயம் இல்லை. சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை வக்கீல்கள் சொல்லிக் கொடுத்து விடுவதால் கோர்ட்டுக்கு போக யாரும் பயப்படுவதில்லை. ஏதோ கல்யாண வீட்டுக்கு போவது போல் பட்டு சட்டையும் வேஷ்டியுமாய் கோர்ட்டுக்கு போகிறார்கள். இப்படி எல்லாமே மாறிக் கொண்டிருப்பதால் இருக்கும் பத்து சதவீத நல்லவர்களும் மாற வேண்டியுள்ளது. நண்பர்கள் உறவினர்கள் கடன் கேட்டால் தயவு தாட்சண்யம் பார்க்காமல் 'நோ' சொல்லுங்கள். ஜாமீன் கையெழுத்தா...? ஸாரி சொல்லி ஒதுங்கிக்கொள்ளுங்கள். குண்டூசியில் இருந்து கார் வரைக்கும் பக்கத்து வீட்டுக்காரர்கள் இரவல் கேட்கிறார்களா.... மன்னிக்கவும் கொடுப்பதற்கு இல்லை என்று சொல்லுங்கள்... இப்படி எல்லாவற்றுக்கும் முதலிலேயே 'நோ' சொல்லி விடுபவர்களுக்கு பின்னால் பிரச்னைகளே வராது என்கிறது அந்த ஆங்கிலக்

சுபயோகம்
சனிப் பெயர்ச்சிப் பலன் புத்தகம்
தவறாமல் படித்துப் பயனடையுங்கள்!

கட்டுரை, கட்டுரையின் முடிவில் எழுதப்பட்டிருந்த ஒரு வாசகத்தை இங்கே ஹைலைட்டாக குறிப்பிட்டாக வேண்டும்.

அந்த வாசகம் இதுதான். 'உலகத்திலேயே தயவு தாட்சண்யம் பார்த்து பின்னால் பிரச்னைகளில் மாட்டிக் கொண்டவர்கள் இந்தியர்கள் மட்டுமே!'

# ஈவ் டீஸிங் ஒழிக்கப்பட்டுவிட்டதா...?

- ஐ.உபைதூர், மேலப்பாளையம்.

# # கொஞ்சம் மட்டுப்பட்டிருக்கிறது. ஹைதராபாத் தைச் சேர்ந்த வாசகர் ஜெயசங்கர் ஒரு கவிதையை எனக்கு எழுதி அனுப்பியிருந்தார். ஈவ்டீஸிங் குறித்த அவர் மனக்குமுறலில் எழுந்த திண்டல் கவிதை

திருமால் செய்தால்
பெருமை.
சிவன் செய்தால்
திருவிளையாடல்
கண்ணன் புரிந்தால்
அது லீலை.
நான் செய்தால்
மட்டும்.
ஈவ் டீஸிங்கா...?

பரிசுக்குரிய கேள்வி

டி.கிருஷ்ணகாந்த், பூந்தமல்லி.

ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள் பகுதிக்கு கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி.

ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்,
க்ரைம் நாவல்,
ஜீயே பப்ளிகேஷன்ஸ்,
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை.
சென்னை -5.

விற்பனையாகிறது! ஜூலை மாத
சுபயோகம்
ஸ்ரீ முருகன் அட்டைப்படம்
முருகன் பூஜைக்குத் தமிழ்த் துதி
கும்பகோணத்தைச் சுற்றிலும் உள்ள 48 கோயில்களைப்பற்றிய விவரங்கள்
12 ராசிக்காரர்களுக்கும் விரிவான - சரியான மாதப் பலன்கள்
ஆசிரியர் விவேகா

தயாராகிறது!
ஆகஸ்ட் மாத
பாக்கெட் நாவல்
அனுராதாரமணன் எழுதும்
முள்ளோடு ஒரு மயிலிறகு
கங்காரு பதில்கள்
ஆர்னிகாநாசரின் சிறுகதை
கார்டு கதைகள்

ராஜேஷ்குமார்



# கள்ள நோட்டைக் கண்டுபிடிக்க...

''அடேங்கப்பா...! இவ்வளவு போஸ்ட் கார்ட்ஸா?''

வீட்டுக்குள் நுழைந்த விவேக் டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டிக் கொண்டே டீபாயின் மேல் குவிக்கப்பட்டிருந்த தபால் கார்டுகளைப் பார்த்தான். சமையலறையிலிருந்து வெளிப்பட்ட ரூபலா சொன்னாள்.

''ஜீன் டெக்னாலஜியை கண்டுபிடிச்சது யார்ன்னு போன மாசம் கேட்டீங்கல்ல அதுக்கான பதில்கள்தான் இதெல்லாம்...''

''எத்தனை பேர் சரியான பதிலை எழுதியிருக்காங்கன்னு பார்த்தியா...?''

''பார்த்தேன்... ஒருத்தர்கூட சரியா எழுதலை. கேள்வி கொஞ்சம் அவுட் ஆஃப் சப்ஜெக்ட். கஷ்டமாயிருந்திருக்கும் போல் தெரியுது...''

''ஜீன் டெக்னாலஜியை கண்டுபிடிச்சது மைக்கேல் ப்லீஸ், மற்றும் ப்ரெஞ்ச் ஆண்டர்ஸன் என்ற இரண்டு



அமெரிக்க உயிரியல் விஞ்ஞானிகள். இந்த பதிலை ஒருத்தர் கூடவா எழுதலை..?''

''எழுதலையே...! சரி... இந்த சந்தேகத்துக்கு நீங்க இன்னும் பதில் சொல்லவேயில்லையே...?''


''எந்த சந்தேகம்...?''

''புற்றுநோயை குணப்படுத்தறதுக்காக நோய் கண்ட ஒருத்தரோட உடம்பிலிருந்து குறைபாடுள்ள ஜீனை எடுத்துட்டு குறையில்லாத ஒரு ஆரோக்கியமான ஜீனை பொருத்த விஷயம் படிக்கிறதுக்கும் கேக்கிறதுக்கும் சுலபமாயிருக்கும். ஆனா நடைமுறை படுத்தும்போது ஒரு பயங்கரமான அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்ன்னு சொன்னீங்கள்...?''

''ஆமா...''

''அது என்ன அபாயம்...?''

''குறையுள்ள ஜீனை எடுத்துவிட்டு அதனிடத்தில் ஆரோக்யமான ஜீன் ஒன்னை செலுத்தும்போது ஏற்கெனவே உள்ள லட்சக்கணக்கான ஜீன்கள் புதிய ஜீனின் வரவால் திடுக்கிட்டு போய் கண்டமேனிக்கு இடம் மாற அபாயம் உண்டு. அப்படி இடம் மாறும்போது செல்கள் உசுப்பப்பட்டு அந்த செல்கள் பயங்கரமாய் பெருகும். இந்த அசுரத்தனமான செல் வளர்ச்சி உடம்பின் இன்னொரு பகுதியில் புற்று நோயை உண்



டாக்கிவிடும். அதாவது வாணலிக்கு தப்பி அடுப்பில் விழுந்த கதையாயிடும்.''

''இருங்க...! ஒரு முக்கியமான சந்தேகம்''

''என்ன...?''

''ஜீன்ங்கிறது மிக மிக நுண்ணிய சமாச்சாரம் இல்லையா?''

''ஆமா...''

''அந்த நுண்ணிய ஜீனை எதால எடுத்து எப்படி செல்லுக்குள்ளே செலுத்துவாங்க...?''

''சபாஷ்! சரியான கேள்வி ...! ஜீனை ஒரு இடுக்கியால எடுத்து ஒரு செல்லுக்குள்ளே பொருத்தறது முடியாத காரியம்...''

''வேற எப்படி...?''

''வைரஸ் மூலமா செலுத்துவாங்க...''

''வைரஸா...?''

''ஆமா... ஆனா இது நோய் பரப்பர வைரஸ் கிடையாது. உடம்புக்கு தீங்கு செய்யாத இந்த வைரஸ்ஸுக்கு பேர் ரெட்ரோ வைரஸ்(RETRO VIROUS). இந்த ரெட்ரோ வைரஸ் தன்னுடைய ஆர்.என்.ஏ.வை டி.என்.ஏ.வாக மாற்றிக் கொண்டு தன்னை தாக்கும் செல்களின் டி.என்.ஏ.வோடு ஒன்றி போய்விடுவதால் ஆரோக்கியமான ஜீன்கள் ஆபத்து இல்லாமல் செல்களுக்கு குடும்பம் நடத்தி புற்றுநோயின் வீரியத்தை குறைத்து, நோய்வாய்ப்பட்ட செல்களையும் அழிக்கிறது.''

''இந்த ஜீன் டெக்னாலஜி ரொம்பவும் காஸ்ட்லி. இந்தியா தாக்கு பிடிக்க முடியாது. அதுவுமில்லாமே ஜீன்களை மாத்தி தற்காலிகமா புற்றுநோயை குணப்படுத்திகிட்டாலும் பிற்கால சந்ததியர்களுக்கு அந்த மாற்றப்பட்ட ஜீன் ஏதாவது பக்க விளைவுகளை உண்டாக்குமோ என்கிற பயமும் இருக்கு...''

''இயற்கையோட விதிகளை நாம மீறும்போது ஏதோ ஒரு பக்கம் அலாரம் அடிக்கத்தான் செய்யுது.''

''டிடிங்...'' வெளியே காலிங் பெல் சத்தம் கேட்டது.

''நீ அலாரம் சொன்னதுமே வாசல்ல காலிங் பெல். யார்ன்னு போய்ப்பாரு...''



யார்ன்னு போய்ப்பாரு...''

ரூபலா போய்க் கதவைத் திறந்தாள். வெளியே வேலைக்காரி தங்கம் சிறிது பதற்றமாய் நின்றிருந்தாள்.

''என்ன தங்கம்... இந்நேரத்துக்கே வேலைக்கு வந்துட்டே. வழக்கமா மூணு மணிக்குத்தானே வருவே...?''

''நான் வேலைக்கு வரல்லேம்மா. இன்னிக்கு காலையில் நீங்க எனக்கு சம்பளமா கொடுத்த ஐநூறு ரூபா நோட்டை மளிகைக் கடைக்காரங்க யாரும் வாங்கமாட்டேன்னு சொல்லிட்டாங்க. அதான் உங்ககிட்டயே குடுத்துட்டு நூறு ரூபா நோட்டா வாங்கிட்டு போலாம்ன்னு வந்தேன்.''

''நோட்டை, செல்லாதுன்னு சொல்லிட்டாங்களா?''

''அப்படி சொல்லலை. நூறு ரூபா நோட்டா கொண்டான்னு சொல்லிட்டாங்க...''

''இது என்ன அநியாயமா இருக்கு...?''

ரூபலா முனகிக்கொண்டே உள்ளே போய் பீரோவைத் திறந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து தங்கத்துக்கு கொடுத்துவிட்டு டைனிங் டேபிளில் சாப்பிட உட்கார்ந்திருந்த விவேக்கிடம் வந்தாள்.

''என்னங்க இது... ஐநூறு ரூபாய் நோட்டை வாங்கமாட்டேன்னு சொல்றாங்களாம்''

''ஒரு பயம்தான்...''

''என்ன பயம்...?''

''போகஸ் ஐநூறு ரூபாய் நோட்டு கொஞ்சம் பரவலா பப்ளிக் பணப் புழக்கத்தில் கலந்திருக்கு. எது நல்ல நோட்டு எது கள்ள நோட்டுன்னு தெரிஞ்சுக்க முடியாத கடைக்காரங்க ஐநூறு ரூபா நோட்டையே வேண்டாம்ன்னு சொல்லிட றாங்க...''

''இப்ப நாம எப்படி இந்த ஐநூறு ரூபா நோட்டை மாத்தறது...?''

''பெரிய டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் கடைகளில் கொடுத்தா வாங்கிக்குவாங்க...''

''அவங்களுக்கு மாத்திரம் எப்படி இது கள்ள

நோட்டில்லை நல்ல நோட்டுன்னு தெரியும்...?''

''அவங்கதான் மெஷின் வெச்சிருக்காங்களே!''

''மெஷினா...?''

''ஆமா... கள்ள நோட்டு எது நல்ல நோட்டு எதுன்னு கண்டுபிடிக்கிற மெஷின்.''

''பரவாயில்லையே...!''

''அந்த மெஷினோட பேர் U.V. எலக்ட்ரானிக் - 2000. கைக்கு அடக்கமான இந்த மெஷினோட எடை ஒரு கிலோதான். ஈஸி ஃபோர்ட்டபிள். பெங்களூரில் இருக்கிற கிரிஸ்டல் டெக்னோ கார்ப்பரேஷன் தயாரித்த இந்த மெஷினுக்கு இப்போ ஏகப்பட்ட கிராக்கி. மெஷின் முழுக்க முழுக்க இந்தியத் தொழில் நுட்பம்...''

''அப்படியா?''

''ம்... இந்த U.V. எலக்ட்ரானிக்-2000 U.V. கள்ள நோட்டுக்களை மட்டுமல்ல கள்ள பாஸ்போர்ட், கள்ள க்ரெடிட் கார்ட், கள்ள விசா, கள்ள டாலர் எல்லாத்தையும் பத்தே விநாடியில் காட்டிக் கொடுத்துடும். இந்த U.V. எலக்ட்ரானிக் 2000 இப்போ எல்லா பேங்குகளிலும் பெரிய டிபார்ட்மெண்ட் ஸ்டோர்களிலும் இருக்கு...''

''சரி... இந்த மெஷின் கள்ள நோட்டுக்களை எப்படி காட்டிக் கொடுக்குது...? ஒரு கள்ள நோட்டுக்கும் ஒரு நல்ல நோட்டுக்கும் குறைந்தபட்சம் எத்தனை வித்தியாசம் இருக்கும்...?''

ரூபலா கேட்க, விவேக் அந்த ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்துக் காட்டியபடி சொன்னான்.

''ஒரு நல்ல நோட்டுக்கும் கள்ள நோட்டுக்கும் இடையில் இருக்கிறது இரண்டே இரண்டு விஷயம்தான். ஒரு நல்ல கரன்ஸி நோட்டை இந்த மெஷினில் வைத்தால் அதனுடைய நிறங்கள் மாறாமல் அப்படியே இருக்கும். நோட்டின் நடுவில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் இல்யூமினேட் த்ரட் எனப்படும் கம்பி பிரகாசமாய் ஒளிரும்... நோட்டு கள்ள நோட்டாக இருந்தால் இந்த ரெண்டும் மிஸ்ஸிங். ஒரு கள்ள நோட்டை இந்த மெஷின் முகர்ந்து பார்த்ததுமே நோட்டு முழுவதும் ப்ளூ கலரா மாறிடும். இல்யூமினேட் த்ரட்



ஒளிரவும் செய்யாது.''

''மனுஷங்க பண்ற எல்லா தப்புகளையும் கண்டு பிடிக்க இப்படியொரு மெஷின் வந்துட்டா பரவா யில்லை...''

''இனிமே எதிர்காலமே மெஷின்கள் கையிலும் கம்ப்யூட்டர்களின் கையிலும்தான். ஒரு மனுஷனை இவன் கெட்டவனா நல்லவனான்னு சொல்லக்கூடிய ஒரு கம்ப்யூட்டரை கண்டுபிடிக்கிற சாஃப்ட்வேர் ஒண்ணை உருவாக்கற முயற்சியில் பயோ கெமிக்கல் சயிண்டிஸ்ட்ஸ் ஈடுபட்டிருக்காங்க...''

''அது வந்துட்டா ரொம்ப பேர்க்கு எலக்ட்ரிக் ஷாக் அடிச்ச மாதிரி இருக்கும்...''

''என்ன சொன்னே? எலக்ட்ரிக் ஷாக்கா?''

''ஆமா...''

''ஆபத்தில்லாத ஒரு எலக்ட்ரிக் ஷாக் எத்தனை வோல்ட்ஸுக்குள்ளே இருக்கணும்ன்னு தெரியுமா...?''

''கேள்வி கேட்க ஆரம்பிச்சுட்டீங்களா? நான் அம்பேல்...!''

ரூபலா நகர்ந்து போய்விட-

வாசகர்களே!

விவேக் கேட்ட கேள்விக்கு உங்களால் பதில் சொல்ல முடியுமா...? பதில் தெரிந்தால் உடனே போஸ்ட் கார்டில் பதில் எழுதி 30.7.2000 தேதிக்கு முன்பாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள். சரியான பதில் எழுதும் ஐந்து பேர்களுக்கு (குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப் பட்ட) புத்தகங்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

முகவரி:

அர்த்தமுள்ள அரட்டை,

**க்ரைம் நாவல்,**

**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**

352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,

சென்னை - 600 005.

## அஞ்சல் அலசல்

இந்தியாவில் மட்டு மல்லாமல் இந்த உலகினில் எங்கு சென்றாலும் இந்தியப் பெண்கள் கற்பு விஷயத்தில் கண்ணகி தான் என்பதை 'ஒரு நாள் ராஜாக்கள்' கதை மூலம் நிரூபித்து விட்டார் ஆர்.கே. வாழ்த்துக்கள்!

- க.மூர்த்தி, சூரியம்பாளையம்.

ஜீ யே சொன்னது போல ஐந்து ரூபாயில் நியூயார்க்குக்கு அழைத்துச் சென்று விட்டார் அண்ணன் ஆர்.கே. போனஸ் சிறுகதைகள் இரண்டும் 'நச்.'

- டி.மாது, பாப்பநாய்க்கன் பாளையம்.

கதிரவன் போன்ற காதல் துரோகிகளுக்கு 'ஒரு நாள் 'ராஜாக்கள்' நாவல் ஒரு சரியான பாடம். கரோலினின் துணிச்சலான செயல் பாராட்டுதலுக்குரியது. ஆர்.கேயின் பதில்கள் சிந்திக்கவும் சிறகடிக்கவும் வைத்தன.

- கே.எம்.வேல்ராஜா, சித்தார்கோட்டை.

'ஒரு நாள் ராஜாக்கள்' நாவல் படித்ததும் ஒரு பெண்ணைக் கொலை செய்ய இத்தனை பேரா என்று வியந்தேன். அபிராமியின் காதலனே அவளுக்கு எமனானது துரதிர்ஷ்டம்.

- கே.கோமனா, இராயப்பேட்டை.

'கடைசித் தோட்டா' போனஸ் சிறு கதையைப் படித்ததும் என்னையும் அறியாமல் எனது நா 'ஜெய்ஹிந்த்' சொன்னது.

- எஸ்.தமிழ்செல்வன், ஆரணி.

சென்ற மாத போனஸ் சிறுகதைகளில் 'மண்ணில் தெரிந்த வானம்' மனிதத்தின் மகத்துவத்தை எடுத்தியம்பியது என்றால் 'கடைசித் தோட்டா' நாட்டுப்பற்றை ரத்தத்தில் பாய்ச்சியது.

- எஸ்.ஆரோக்கியசாமி, திண்டுக்கல்.

'ஒரு நாள் ராஜாக்கள்' நாவலில் இறுதிவரை உண்மைக் குற்றவாளி யார் என்பது தெரியாத வண்ணம் கதையை அமைத்திருப்பது ஆர்.கேயின் தனிச் சிறப்பு. - பா.ஆறுமுகம், ...ராஜபாளையம்.

# ரத்தத்தில் ஒரு ராத்திரி!



ராஜேஷ்குமார்

# ரத்தத்தில் ஒரு ராத்திரி

- ராஜேஷ்குமார்

## 1

டி.வி. பார்த்துக் கொண்டிருந்த விஜேஷ் 'இனி தூங்கப் போகலாம்' என்று நினைத்த போது டெலிபோன் அந்த இரவுநேர நிசப்தத்தைக் கெடுத்துக் கொண்டு அலறியது.

விஜேஷ் வால் க்ளாக்கைப் பார்த்தான். எலக்ட்ரானிக் க்ளாக் நேரம் 11.45ஐக் காட்டியது. 'இந்த நேரத்தில் டெலிபோன் பண்ணுவது யாராக இருக்கும்?'

யோசித்தபடியே டெலிபோனை நோக்கிப் போய் ரிஸீவரை எடுத்தான் விஜேஷ்.

மறுமுனையில் ஒரு ஆண்குரல் கேட்டது.

''மிஸ்டர் விஜேஷ்...?''

''எஸ்... ஹோல்டிங்...''

''ஸார்...! நான் உங்க விசிறி. நீங்க டைரக்ட் பண்ணின எல்லாப் படங்களையும் குறைந்தது பத்து தடவையாவது பார்த்திருப்பேன்....''

''அப்படியா...? ரொம்ப நன்றி.''

''ஸார்...! நீங்க டைரக்ட் பண்ணின எல்லா படங்களுமே சில்வர் ஜுப்ளி கொண்டாடியிருக்கு. தொடர்ந்து ஆறு வெற்றிப்படங்கள். எப்படி ஸார் உங்களால முடிந்தது...?''

விஜேஷ் சிரித்தான். ''எல்லாம் உங்க மாதிரியான ரசிகர்கள் கொடுத்த ஆதரவுதான்.''

''ஸார்...! இந்த ராத்திரி நேரத்துல உங்களுக்கு தொந்தரவு தர்றதுக்காக மன்னிக்கணும். ஒரு பத்து நிமிஷம் உங்ககிட்ட நான் பேசலாமா ஸார்...?''



''தாராளமா பேசலாம்...''

''நேர்ல வரட்டுமா...?''

''நேர்ல வேண்டாம். எதைப் பேசறதாயிருந்தாலும் போன்லயே பேசுங்க.''

''உங்களை நான் நேர்ல பார்த்து பேசத்தான் பிரியப்படறேன் ஸார்.''

''சரி... அடுத்த வாரத்துல ஒரு நாள் பகல்ல எனக்கு போன் பண்ணிட்டு வாங்க...''

''எனக்கு இப்பவே உங்களைப் பார்க்கணும் ஸார்...''

விஜேஷுக்கு லேசாய்க் கோபம் வந்தது.

''ஸாரி... இந்த ராத்திரி நேரத்துல நான் யாரையும் பார்த்து பேச விரும்பலை. அதுவுமில்லாமே வீட்ல நிறைய கெஸ்ட் இருக்காங்க.''

டெலிபோனில் அவன் சிரித்தான். ''ஸார்! நீங்க இன்னிக்கு சினிமா இண்டஸ்ட்ரியில் மிகப் பெரிய டைரக்டர்... ஒரு ரசிகனை சந்திச்சு பேசறதுக்காக கெஸ்ட் இருக்காங்கன்னு பொய் சொல்லலாமா...?''

விஜேஷ் எரிச்சலானான். ''நான் பொய் சொல்றேன்னு உனக்கு எப்படி தெரியும்...?''

''எல்லாம் ஞான திருஷ்டிதான்...! இப்ப உங்க பங்களாவில உங்களைத் தவிர வேற யாருமே இல்லை. உங்க மனைவி அகிலா ஊருக்கு போயிருக்காங்க. சமையல்காரன் ரெண்டுநாள் லீவு. கேட்ல வாட்ச்மேன் மட்டும்தான் இருக்கான். வேற யாரும் கிடையாது. நான் சொல்றது சரியா ஸார்...?''

விஜேஷ் கோபத்தில் பேச்சு வராமல் தவிக்க - அவன் சிரித்தான்.

''என்ன டைரக்டர் ஸார்... கோபமா...?''

''இதோ பார்... நீ என்கிட்ட என்ன பேசணுமோ அதை பேசிட்டு ரிஸீவரைக் கீழே வை.''

''போன்ல பேச முடியாது ஸார். நேர்ல வந்துடறேன். ஒரு பத்து நிமிஷம் போதும். பேசிட்டு போயிடறேன்''

''வேண்டாம்.... நீ வராதே''

''இதோ வந்துட்டே இருக்கேன்...'' சொல்லிவிட்டு அவன் இணைப்பைத் துண்டித்துவிட, விஜேஷ் கோபமாய் ரிஸீவரைச் சாத்திவிட்டு பக்கத்தில் இருந்த

இண்ட்டர்காம் ரிஸீவரை எடுத்து ஒரு டயல் பட்டனைத் தட்டினான்.

கேட்டிலிருந்து வாட்ச்மேன் குரல் கொடுத்தான்.

''ஸார்...!''

''மாணிக்கம்...! யாராவது என்னைப் பார்க்க வந்தா உள்ளே அலவ் பண்ணிடாதே...''

''சரிங்க ஸார்...''

''எவனாவது வாசலுக்கு வந்து என்னைப் பார்க்கணும்ன்னு தகராறு பண்ணின்னா போலீஸுக்கு போன் பண்ணிரு''

''சரிங்க ஸார்...''

விஜேஷ் ரிஸீவரை வைத்துவிட்டு எரிச்சலோடு படுக்கையறையை நோக்கி நகர்ந்த விநாடி –

டெலிபோன் மறுபடியும் கூப்பிட்டது.

எடுத்தான்.

அவன் குரல் சிரிப்போடு கேட்டது. ''என்ன டைரக்டர் ஸார்...! கேட்ல இருக்கிற வாட்ச்மேனுக்கு இண்ட்டர்காம்ல தகவல் கொடுத்து யாரையும் உள்ளே 'அலவ்' பண்ணக்கூடாதுன்னு சொல்லிட்டீங்க போலிருக்கு?''

விஜேஷ் வியந்து கொண்டிருக்கும்போதே அவன் டெலிபோனில் தொடர்ந்தான். ''நீங்க இண்ட்டர்காம் பண்ணி பேசினது எனக்கு எப்படி தெரிஞ்சதுன்னு பார்க்கறீங்களா...? கொஞ்சம் உங்க தலையைத் திருப்பி சிட் அவுட் பக்கம் பாருங்க...''

விஜேஷ் திரும்பிப்பார்த்தான்.

சிட் அவுட்டில் பரவியிருந்த அரையிருட்டில் யாரோ ஒருவன் நின்றிருந்தான். கையில் செல்போன்.

விஜேஷ் ரிஸீவரை வைத்துவிட்டு பதற்றமாய் சிட் அவுட்டை நோக்கிப்போக, அவன் இருட்டினின்றும் வெளிப்பட்டான்.

இளைஞன். இருபத்தைந்து வயது இருக்கலாம். ஒடிசலாய் உயரமாய் இருந்தான். கண்களில் இள நீல வர்ணத்தில் மெலிதான கண்ணாடி. நல்ல வெள்ளை நிறத்தில் ஒரு பைஜாமா.

''ஸாரி... ஸார்...! நான் இந்த சிட்அவுட்டுக்கு வந்து அரைமணிநேரமாச்சு. நீங்க டி.வி. பார்த்துகிட்டு இருக்கும்



போதே வந்துட்டேன். வழி பின்பக்கம்...''

விஜேஷ் கோபமாய் அவனைப் பார்த்தான். ''பார்த்தா படிச்சவன் மாதிரி இருக்கே... இப்படித்தான் பர்மிஷன் இல்லாமே வீட்டுக்குள்ளே நுழையறதா...?''

''அதான் ஸாரி சொல்லிட்டேனே...!''

''சரி... இப்ப உனக்கு என்ன வேணும்...?''

''ஒரு பத்து நிமிஷம் உங்ககிட்ட பேசணும்''

''என்ன பேசணுமோ பேசிட்டு உடனே கிளம்பு...''

''அப்படி அவசரமா கிளம்ப முடியாது ஸார். நிதானமா பேச வேண்டிய விஷயம். அப்படி உட்கார்ந்து பேசலாமா....?''

''.....''

''என்ன ஸார் அப்படி பார்க்கறீங்க? நான் உங்களை ஒண்ணும் பண்ணிட மாட்டேன். பயப்படாதீங்க... ம்... வாங்க... லெட் அஸ் ஹேவ் ஏ டாக்....''

விஜேஷ் உள்ளே கூட்டிப்போய் ஒரு நாற்காலியைக் காட்டிவிட்டு எதிரில் இருந்த சோபாவில் உட்கார்ந்தான்.

''என்ன விஷயம் சொல்லு....?''

''நான் ஒரு சிகரெட் ஸ்மோக் பண்ணிக்கலாமா ஸார்...?''

விஜேஷ் தலையாட்டினான்.

''ம்... பண்ணிக்க...''

அவன் ஒரு சிகரெட்டை பதற்றமில்லாமல் நிதானமாய் பற்ற வைத்துக் கொண்டு முதல் புகையை விட்டான்.

''ஸார்...! நீங்க டைரக்ட் பண்ணின ஆறு படங்களில் மூணு படம் க்ரைம் சப்ஜெக்ட். அந்த மூணு படங்களையும் ரொம்பவும் அற்புதமா பண்ணியிருந்தீங்க. நாட்டில் நடக்கிற அநியாயங்களை தட்டிக் கேட்கிறதுக்காக இளைஞன் ஒருத்தன் சட்டத்தை கையில் எடுத்துக்கிட்டு பசுத்தோல் போர்த்திய பெரிய மனுஷங்களை ஹிட் லிஸ்ட்படி தீர்த்துக் கட்டற கதை ரொம்பவும் ஹைலைட். அதே மாதிரி ஒரு அமைதியான குடும்பப் பெண் ஒரு புயல் காற்றாய் மாறி தன்னை நாசப்படுத்தின பெரிய மனிதர்களை பழிவாங்கற கதையும் ஸிம்ப்ளி சூப்பர்ப்... அதே மாதிரி மூணாவது படமும்...''

விஜேஷ் கையமர்த்தினான்.

''என்னோட க்ரைம் சப்ஜெக்ட் படங்கள் உனக்கு

ரொம்பவும் பிடிச்சிருக்கு. அவ்வளவுதானே...?''

''ஆமா... ஸார்... மூணு க்ரைம் படங்களிலேயும் கொலைகள் புதுவிதமான முறையில் செய்யப்படறதும் போலீஸ் அதைக் கண்டுபிடிக்க முடியாமே திணறி ஃபைல்களை க்ளோஸ் பண்றதும் எனக்கு பிடிச்ச விஷயங்கள்.''

விஜேஷ் எரிச்சலானான்.

''இப்ப நீ என்ன சொல்ல வர்றே?''

''இதோ விஷயத்துக்கு வந்துட்டேன் ஸார். உங்களுக்கு அற்புதமான க்ரிமினல் ப்ரெய்ன் ஸார். அந்த ப்ரெய்னை உபயோகப்படுத்தி...''

''உபயோகப்படுத்தி...?''

''நீங்க எனக்கு ஒரு உதவி பண்ணணும்''

''என்ன உதவி...?''

அவன் சில விநாடிகள் மௌனித்து பின் தயக்கக் குரலில் சொன்னான்.

''நான் ஒருத்தரைக் கொலை பண்ணணும். ஆனா போலீஸ்ல நான் மாட்டிக்கக்கூடாது. போலீஸுக்கு என் மேல கொஞ்சமும் சந்தேகம் வராமே எப்படி கொலை பண்றதுன்னு நீங்கதான் எனக்கு சொல்லித்தரணும்''

விஜேஷ்க்குள் கோபம் சூறாவளியாய் சுழன்றும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கேட்டான்.

''நீ யாரைக் கொலை பண்ணப் போறே...?''

அவன் ஜிப்பாவுக்குள் கையை நுழைத்து ஒரு ப்ரௌன் கவரை எடுத்தான். கொடுத்தான்.

''இதுல அவன் போட்டோ இருக்கு. பாருங்க''

விஜேஷ் அந்த கவரை வாங்கி உள்ளே கையைவிட்டு போட்டோவை எடுத்தான்.

பார்த்தான்.

போட்டோவில் விஜேஷ் சிரித்துக் கொண்டிருந்தான்.

## 2

''குட் மார்னிங் ஸிம்ஹறா...''

வலது காதருகே வெப்பமான குரல் கேட்டு தூக்கத்தினின்றும் விடுபட்டாள் அந்த அழகான இருபத்தி மூன்று வயது ஸிம்ஹறா.



விமானம் பறந்து கொண்டிருக்க - பக்கத்து இருக்கையில் உட்கார்ந்திருந்த ஹேமச்சந்திரன் மறுபடியும் ''குட்மார்னிங்'' சொன்னான். ஸிம்ஹறா தன் சிறிய வாயைத் திறந்து கொட்டாவி ஒன்றை வெளியேற்றிவிட்டு இரண்டு கைகளையும் தூக்கி அழகாய் சோம்பல் முறித்துக் கொண்டே கேட்டாள்.

''மெட்ராஸ் வந்தாச்சா...?''

''நெருங்கிட்டிருக்கோம்....''

''மணி என்ன...?''

''அஞ்சு... இன்னும் கொஞ்ச நேரத்துல விடிஞ்சுடும்.''

ஹேமச்சந்திரனை முறைத்தாள் ஸிம்ஹறா.

''மெட்ராஸ்தான் இன்னும் வரலையே, அதுக்குள்ளே என்னை எதுக்காக எழுப்பிவிட்டே ஹேமா...?''

''கொஞ்ச நேரம் பேசிட்டு வரலாமேன்னுதான் எழுப்பிவிட்டேன்...''

''பாதகா...! சிகாக்கோவில் ஃப்ளைட் ஏறிய நிமிஷத்திலிருந்து பேசிப் பேசி களைச்சுப் போய் ராத்திரி ஒரு மணிக்குத்தானே தூங்கினோம்...''

''இருந்தாலும் அடுத்த அரைமணி நேரத்துக்குள்ளே மெட்ராஸ் ஏர்போர்ட் வந்துடும். நீ இறங்கி உன் பாட்டுக்கு போயிடுவே... நான் இறங்கி என் பாட்டுக்கு போயிடுவேன். அதுக்கப்புறம் உன்னைப் பார்த்து பேசணும்ன்னா கொஞ்சம் கஷ்டமான காரியம். அதான் எழுப்பி விட்டுட்டேன்.''

''சரி...! ஏர்ஹோஸ்டஸ் வர்றா... காபி கிடைக்குமான்னு கேளேன்...''

''கேட்டுட்டா போகுது... அஞ்சலா தமிழ் பொண்ணுதான். மைலாப்பூர்ல வீடு.''

''பேரையெல்லாம் கூட கேட்டு வெச்சுட்டியா...?''

''ஒரு சின்ன பயோடேட்டாவே ரெடி. பேரு அஞ்சலா. வீட்ல கூப்பிடறது அஞ்சு! ஸ்டெல்லாவில் எம்.ஏ. சின்ன குடும்பம். ஒரு அம்மா, ஒரு அப்பா, ஒரு அக்கா. அப்பா ரிடையர்ட் தாசில்தார். அம்மா ஒரு ஸ்கூலுக்கு ஹெட் மிஸ்ட்ரஸ். அக்கா எம்.பி.ஏ. முடிச்சுட்டு பெங்களூர்ல ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் வர்றவங்களுக்கு 'ஹலோ'

மட்டும் சொல்லிமாசம் பொறந்தா இருபதாயிரம் சம்பள வாங்கிக்கிட்டு இருக்கா... அவளுக்கு ஒரு ல அஃபேர்ஸும் உண்டாம். பேர் ராக்கேஷ். இண்டிய ஏர்லைன்ஸில்..."

"ஸ்டாப் இட்..." ஸிம்ஹா இரண்டு காதுகளையு பொத்திக்கொண்டு ஹேமச்சந்திரனை முறைத்தாள்.

"அவளுக்கு எங்கெங்கே மச்சம் இருக்குன் கேட்டுட்டியா...?"

"சேச்சே...! அது அவ்வளவு நாகரீகம் இல்லை."

"எண்டா.... ஃப்ளைட் புறப்பட்ட நிமிஷத்திலிருந் நானும் உன் பக்கத்துலதான் இருக்கேன். எப் ஏர்ஹோஸ்டஸ்கிட்ட பேசி இவ்வளவு டீடெய்ல்ை கலெக்ட் பண்ணினே? நான் தூங்கும் போதா...?"

"சேச்சே...!"

"பின்னே...?"

"நீ 'மூச்சா' போனப்ப..."

"பாவி...! அந்த ரெண்டு நிமிஷத்துக்குள்ளே ஒ என்சைக்ளோபீடியாவையே தயார் பண்ணியிரு கியே....?"

"அய்யாவோட சாமர்த்தியம் இப்ப தெரியுதா...?"

ஏர்ஹோஸ்டஸ் பக்கத்தில் வந்தாள்.

"குட்மார்னிங் மிஸ்டர் ஹேம்..." *

ஸிம்ஹா ஹேமச்சந்திரனின் காதோரம் சாய்ந் கிசுகிசுத்தாள்.

"டேய்...! உனக்கு வாழ்வுதாண்டா... மெட்ராஸ் போய் சேர்றதுக்குள்ளே 'ஐ லவ் யூ...' சொல்லிடு. சிம்ரனையு ரம்பாவையும் மிக்ஸ் பண்ணின தினுசில் இருக்கா".

ஹேமச்சந்திரன் வழிந்தான்.

"குட்மார்னிங் அஞ்சு... எங்களுக்கு காபி கிடைக்குமா...?"

"ஓ...! ஷ்யூர்... ப்ளாக் காபி? ஆர் மில்க் காபி...?"

"மில்க் காபி..."

"ஏதாவது ஸ்நாக்ஸ்....?"

"அய்யோ...! அதெல்லாம் வேண்டாங்க... வெறும் காபி மட்டும் போதும்..."

ஸிம்ஹா கேட்டான்.



"மெட்ராஸ் எப்ப லேண்ட் ஆகும்...?"

"ஃபைவ் ஃபார்ட்டி ஃபைவ்..." சொல்லிக்கொண்டே ஏர்ஹோஸ்டஸ் விமானத்தின் இன்ஃபேண்ட்ரி பகுதியை நோக்கிப் போனாள்.

ஹேமச்சந்திரன் ஸிம்ஹாவிடம் சாய்ந்தான். "ஸிம்ஹா...! இவ எனக்கு மசிவாளா....?"

"மசிஞ்சாச்சு... உன்னை அவ பார்க்கிற பார்வையில் ஏகப்பட்ட வோல்டேஜ் மின்சாரம். ஃப்ளைட்டைவிட்டு இறங்கறதுக்குள்ளே ஐ லவ் யூ சொல்லிடு."

"சொல்லிடலாம்ங்கிறியா?"

"சொல்லிடு..."

"அவளோட ரியாக்ஷன் வேற மாதிரியிருந்தா....?"

"எனக்கு அப்படி தோணலை... உன்னை அவ பயங்கரமா லுக் விடறா..."

"இதோபார் ஸிம்ஹா.... இந்த உலகத்திலேயே புரிஞ்சுக்க முடியாத விஷயம் பெண்ணோட மனசுதான். உதாரணத்துக்கு உன்னையே எடுத்துக்கோயேன். ரெண்டு பேரும் வெளிநாட்ல கடந்த ரெண்டு வருஷ காலமா ஒரே யுனிவர்ஸிட்டியில் படிச்சோம். நீ என்கிட்ட சிரிச்சு சிரிச்சு பேசறதை தப்பா புரிஞ்சுகிட்டு உன்கிட்ட ஒருநாள் 'ஐ லவ் யூ' ன்னு சொன்னேன். நீ என்ன சொன்னே தெரியுமா...?"

"ஸாரி... எனக்கு படிப்புதான் முக்கியம். நான் இங்கே வந்தது காதலிக்க கிடையாது. படிக்க. என்னை கெட்ட பார்வை பார்த்துக்கிட்டு பழகாதே! ஒரு ஃப்ரெண்டா நினைச்சி பழகறதாயிருந்தா பழகு - இல்லேன்னா ஓடிப்போயிருன்னு சொன்னேன்..."

"அதே மாதிரி இவளும் சொல்லிட்டாள்ன்னா....?"

"ட்ரை பண்ணிப் பாரேன்..."

"லெட்டர்ல எழுதி கொடுக்கட்டுமா...?"

"வேண்டாம். எதுவுமே ரிட்டன்ல இருக்கக்கூடாது"

அஞ்சலா காபி கோப்பைகளோடு வந்தாள்.

"ப்ளீஸ்... ஹேவ்... இட்...."

"தேங்க்யூ...." ஸிம்ஹாவும் ஹேமச்சந்திரனும் காப்பி கோப்பைகளை எடுத்துக் கொண்டார்கள்.

"இப்ப சொல்லட்டா ஸிம்ஹா....?"

''வேண்டாம்... ஃப்ளைட்டை விட்டு இறங்கும் போது சொல்லு. அவ சிரிச்சா உன் போன் நெம்பர் குடு. முறைச்சா ஸாரி சிஸ்டர்ன்னு சொல்லிடு....''

போகத் திரும்பிய ஏர்ஹோஸ்டஸ் அஞ்சலா புன்னகையோடு திரும்பினாள்.

''என்ன மிஸ்டர் ஹேம்... என்கிட்ட ஏதாவது சொல்லணுமா....?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை....''

''எனக்குத் தெரியும்... நீங்க ஏதோ சொல்லத் தயங்கிட்டு இருக்கீங்க...''

''அது... வந்து... வந்து....''

''ஐ... லவ்... யூ 'ன்னு சொல்லப் போறீங்களா?''

ஹேமச்சந்திரன் அயர்ந்து போக, ஸிம்ஹா புன்னகைத்தாள்.

''அதேதான்....!''

''ஸாரி சகோதரா....! எனக்கு அடுத்த மாசம் கல்யாணம் ஃபிக்ஸ் ஆயிடுச்சு, லவ் மேரேஜ்தான். எனக்கு கணவரா வரப் போகிற 'வுட் - பி' யார் தெரியுமா...? இப்போ விமானத்தை ஓட்டிக்கிட்டு இருக்கிற பைலட் சந்திஷ்....''

போய்விட்டாள்.

ஸிம்ஹா ஒரு வாய் காபி சாப்பிட்டு விட்டு சிரித்தாள்.

''டேய்... ஹேமா... ஒரே புழுதி.....''

''புழுதியா...? என்ன புழுதி....?''

''உன்னோட காதல் கோட்டைதான் இடிஞ்சு விழுந்துட்டிருக்கே... எவ்வளவு புழுதி கிளம்புது பார்...''

''எனக்கு கிடைச்ச ரெண்டாவது தோல்வி இது. இனிமே இப்படி ரிஸ்க் எடுக்கமாட்டேன். நான் காதல்ல ஜெயிக்கணும்ன்னா ஒரே ஒரு வழிதான் இருக்கு....''

''என்ன...?''

''நீ என்னை லவ் பண்ணிடேன்...''

''உதைப்பேன்...! ராஸ்கல்! நான் ஒரு ராஜகுமாரனுக்காக காத்துக்கிட்டிருக்கேன். ''

''ஏன்? நான் ராஜகுமாரன் மாதிரி இல்லையா?''

''ஸாரிடா ஹேமா...! எனக்கு நீ சேவகன் மாதிரிதான் தெரியறே....!''

''அடிப்பாவி...'' ஹேமச்சந்திரன் பொய்க் கோபத்தோடு



ஸிம்ஹாவை அடிக்கக்கை ஓங்க, ஸ்பீக்கரில் குரல் கேட்டது.

''விமானம் சென்னையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. பயணிகள் பெல்ட்டுகளை இணைத்துக் கொள்ள வேண்டுகிறோம். யாரும் புகை பிடிக்கக்கூடாது. தேங்க் யூ ஃபார் நாட் ஸ்மோக்கிங்...''

காபி குடித்து முடித்ததும் ஸிம்ஹாவும் ஹேமச்சந்திரனும் பெல்ட்டுகளை உபயோகப்படுத்தி இருக்கைகளோடு இணைத்துக் கொண்டார்கள்.

''ஸிம்ஹா...!''

''ம்....''

''மெட்ராஸில் நாம அடிக்கடி பார்த்துக்க முடியுமா?''

''ஏன் முடியாது?''

''இல்லே நீ இருக்கிறது அசோக் நகர். நான் இருக்கிறது தாம்பரம்...''

''தாம்பரம்தானே.... தாய்லாந்து கிடையாதே...! என்னோட கம்ப்யூட்டர் சென்டர்க்கு நீ எப்போ வேணும்ன்னாலும் வரலாம். மோஸ்ட் வெல்கம்...''

''உன்னை ரிஸீவ் பண்ண ஏர்போர்ட்டுக்கு யாராவது வருவாங்களா....?''

''என்னோட அக்கா ஷர்மிலியும் அக்காவோட கணவர் தயாநிதியும் இந்நேரம் வந்து ஏர்போர்ட் லௌன்ஞ்சில் காத்துகிட்டு இருப்பாங்க.''

பேசிக் கொண்டிருக்கும்போதே விமானம் உயரம் இழக்க, முட்டை கண்ணாடி வழியே வங்கக்கடலும் சென்னை நகரின் விடிகாலை வெளிச்சமும் தெரிந்தன. மிகலேசாக நெய்யப்பட்ட பனிப்போர்வை ஒன்று நகரை மூடியிருந்தது.

சந்திரன் கண்ணாடி வழியே எட்டிப்பார்த்து விட்டு கண்களில் சந்தோஷம் மின்ன சொன்னான்.

''ரெண்டு வருஷம் கழிச்சு மெட்ராஸைப் பார்க்கும் போது என் உடம்புக்குள்ளே ஒரு ரசாயன மாற்றம் நடக்குது. ஸிம்ஹா... உனக்கு...?''

''எனக்கும் அதே அதே....''

விமானம் இன்னமும் தாழப்பறந்தது. இன்னமும் அணைக்கப்படாத கார்ப்பரேஷன் சோடியம் வேப்பர் விளக்குகள் நகரை வெளிச்சமாய்க் காட்ட, மெரினா பீச்

பேவ்மெண்ட்டில் எறும்புகள் நகர்கிற மாதிரியா
தினுசில் ஜனங்கள்வாக்கிங் போய்க் கொண்டிருந்தார்க

விமானம் மீனம்பாக்கத்தை வட்டமடித்து ரன்வேயி
தாழ்ந்து ஊர்ந்து லௌன்ஞ்சுக்கு நேராய் போய் நின்றது

எல்லோரும் இறங்க, கடைசியாய் ஸிம்ஹாவு
ஹேமச்சந்திரனும் இறங்கினார்கள்.

''ஹேமா! உன்னை ரிஸீவ் பண்ண யார் வந்திரு
பாங்க....?''

''வந்தா அம்மாதான் வரணும். ஆனா இவ்வள
காலையில அம்மாவால முடியாது. காரணம்... அவங்
ஆஸ்துமாபேஷண்ட்.''

''ஹேமா...! நீ சீக்கிரமா ஒரு கல்யாணத்
பண்ணிக்கோ. காதல் காதல்ன்னு அலையாதே...''

''ஸிம்ஹா...!''

''என்ன...?''

''நான் ஒரு விஷயம் சொன்னா நீ கோபிச்சுக்
மாட்டியே?''

''மொதல்ல விஷயத்தைச் சொல்லு''

''உனக்கு மறுபடியும் அப்ளிகேஷன் போடலாம்ன்
இருக்கேன்''

''உதை விழும்...''

''உனக்கு என்னை ஏன் பிடிக்கலை சொல்லு...?''

''உன்னை ஒரு ஃப்ரண்டா பார்க்கத்தான் எனக்கு
பிடிக்கும். உன்னை டேய் போட்டு பேசற உரிமை இந்
ஃப்ரண்ட்ஷிப்பில்தான் கிடைக்கும். என்னைவிட ஒ
அழகான பெண்ணாப் பார்த்து நான் உனக்கு கல்யாண
பண்ணிவைக்கிறேன்...''

''ம்... எனக்கு கொடுத்து வெச்சது அவ்வளதுதான். இந்
ஜென்மத்திலாவது நிறைய புண்ணியம் பண்ணி அடுத்
ஜென்மத்துல உன்னைட் ரை பண்றேன்...''

''பெஸ்ட் ஆஃப் லக்...''

இருவரும் லௌன்ஞ்சுக்கு வந்தார்கள். பரவியிருந்
கூட்டத்தில் ஸிம்ஹா பார்வையைத் துரத்தினாள். க
களில் ஏமாற்றம் பரவியது. ஹேமச்சந்திரன் கேட்டான்.

''என்ன... ஸிம்ஹா! உன்னோட அக்காவும் அவங்
கணவரும் வந்திருப்பாங்கன்னு சொன்னே...?''



''அதான் பார்க்கிறேன். காணோமே...?''

''நீ இன்னிக்கு இந்த ஃப்ளைட்லதான் வரப் போறேன்னு தெரியுமா...?''

''தெரியும்... அக்காவுக்கு ரெண்டு தடவை போன் பண்ணி சொல்லியிருக்கேன். நேத்து ஃப்ளைட் ஏறும்போது போன் பண்ணினேன். ரிஸீவ் பண்ண வர்றேன்னு சொன்னாங்களே...''

''கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிப்பார்க்கலாம். கார்ல வந்துட்டிருப்பாங்கன்னு நினைக்கிறேன்...''

''நீ வேணும்ன்னா புறப்படு ஹேமா. நான் வெயிட் பண்ணி பார்க்கறேன்...''

''இருக்கட்டும். உன்னோட அக்கா வர்ற வரைக்கும் நானும் இருக்கேன். அவங்களையும் பார்த்து பேசினமாதிரி இருக்கும்''

''டேய்... ஜொள்ளு...''

''பாத்தியா...! தப்பா நினைக்கறியே! உனக்கு எப்படி அவங்க சிஸ்டரோ அப்படித்தான் எனக்கும்...''

''சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன்டா''

இருவரும் அங்கிருந்த பாலிமர் நாற்காலிகளில் சாய்ந்தார்கள். நேரம் கரையக் கரைய விடியற்காலை வெளிச்சத்தின் வோல்டேஜ் கூடிக் கொண்டேயிருந்தது. லௌஞ்சில் இருந்த கும்பலின் அடர்த்தி வெகுவாய்க் குறைந்து நேரம் மணி ஆறேகாலைத் தொட்டிருக்க ஸிம்ஹா எழுந்தாள்.

''ஹேமா! லக்கேஜைப் பார்த்துக்க. நான் வீட்டுக்கு போன் பண்ணிட்டு வர்றேன்.''

பக்கத்தில் இருந்த பூத்துக்குப் போய் ஒரு ரூபாய் நாணயத்தின் உதவியோடு டெலிபோனை உயிர்ப்பித்துக் கொண்டு பேசினாள்.

''ஹலோ...''

மறுமுனையில் அக்கா ஷர்மிலியின் குரல் கேட்டது.

''யாரு ஸிம்ஹாவா...?''

''ஸிம்ஹாவேதான்...! என்னக்கா நீ...! நீயும் அத்தானும் ஏர்போர்ட்டுக்கு என்னை ரிஸீவ் பண்ண வருவீங்கன்னு நினைச்சா நீ பாட்டுக்கு வீட்ல உட்கார்ந்துகிட்டு போன்ல ஸிம்ஹாவான்னு கேட்டுக்கிட்டு இருக்கே...''

''ஸாரி ஸிம்ஹா...! வர முடியலை. கொஞ்சம் ஃபீவரிஷ்ஷா இருந்தது.''

''சரி...அத்தானாவது வந்திருக்கலாமில்லையா?''

''அவர் நிம்மதியா தூங்கிட்டிருக்கார். நீ லேட் பண்ணாமே ஒரு டாக்ஸி பிடிச்சு வந்துடு...''

ஸிம்ஹாவுக்கு கோபம் வந்தது.

''அக்கா! ரெண்டு வருஷம் கழிச்சு ஃபாரினிலிருந்து திரும்பறேன். என்னை ரிஸீவ் பண்ண நீயும் அத்தானும் வரக்கூடாதா...?''

''ஸாரி ஸிம்ஹா... கோபப்படாமே நீயே ஒரு டாக்ஸி பிடிச்சுவந்துடு...''

''வந்து உன்னைப் பேசிக்கறேன்'' ஸிம்ஹா ரிஸீவரை வைத்துவிட்டு பூத்தினின்றும் வேகமாய் வெளிப்பட்டாள். கோபத்தில் மார்புகள் ஏறி தாழ்ந்தன. உஷ்ணமாய் பெருமூச்சு. படபடப்பாய் வந்தது ஸிம்ஹாவுக்கு.

ஹேமச்சந்திரன் கேட்டான்.

''என்ன ஸிம்ஹா...! உன்னோட சிஸ்டர் போன்ல கிடைச்சாங்களா...?''

''வா... ஹேமா... போலாம்...''

''அட... என்னாச்சு...? எதுக்காக இவ்வளவு கோபம்...?''

லக்கேஜைத் தூக்கிக் கொண்டாள் ஸிம்ஹா.

''என்ன ஒரு அலட்சியம்...? அவளை வீட்ல போய் பேசிக்கறேன்...''

''ஸிம்ஹா! வாட்ஸ் தப்ராப்ளம்?''

''என்னை ரிஸீவ் பண்ண ஏன் ஏர்போர்ட்டுக்கு வரலைன்னு கேட்டா... ஃபீவரிஷ்ஷா இருந்ததால வர முடியலையாம். அத்தான் எங்கேன்னு கேட்டா தூங்கிட்டிருக்காராம்.... ரெண்டு வருஷம் கழிச்சு ஃபாரினிலிருந்து திரும்பறேன். எனக்கு எப்பேர்ப்பட்ட பாசமானவரவேற்பு கிடைச்சிருக்கு பார்த்தியா? அப்பா அம்மா இல்லாத எனக்கு இவங்க காட்ற...''

ஸிம்ஹா பேசமுடியாமல் திணறி கண்களில் நீர் கோர்த்தாள். கர்ச்சீஃபை எடுத்து கண்களை ஒற்றிக் கொண்டாள்.

''அடடே! என்ன ஸிம்ஹா... இது...? உங்கக்காவும் அத்தானும் ரிஸீவ் பண்ண வராததை ஒரு பெரிய



பிரச்னையாஎடுத்துக்கிட்டியே...! வீட்டுக்குப்போனாஎல்லாம் சரியாயிடும்...''

''போய் அவளை என்ன பண்றேன்னு பார். அக்காவாம் அக்கா...''

லக்கேஜ்களை சேகரித்துக் கொண்டு வெளியே வந்தார்கள்.

''ஹேமா! நீ கிளம்பு...''

''வீட்ல போய் பிரச்னை பண்ணாதே. வாழ்க்கையில டேக்இட் ஈஸி பாலிஸி அவசியம். எல்லாருமே நம்ம மேல பிரியமாயிருக்கணும்ன்னு நாம நினைக்கிறது தப்பு...! சாயந்தரமா உனக்கு போன் பண்றேன்... ஓ.கே...''

ஹேமச்சந்திரன் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு ஒரு டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு கிளம்பிவிட, ஸிம்ஹாவும் ஒரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டாள்.

எய்த அம்பாய் டாக்ஸி பாய்ந்து அசோக் நகரைத் தொட்டபோது ஏழு மணி. சூரியனின் வெளிச்சம் சென்னையை நன்றாக அலம்பியிருந்தது.

''எத்தனையாவது அவென்யூம்மா...?''

''ஒன்பதாவது அவென்யூ''

டாக்ஸி திரும்பியது. ஜனங்கள் கூப்பன்களோடு காத்திருந்த பால் பூத்தைக் கடந்தது.

''அதோ... அந்த பச்சை பெயிண்ட் கேட் வீடுதான்...''

டாக்ஸி போய் நின்றது.

மீட்டர் பார்த்து பணத்தைக் கொடுத்துவிட்டு லக்கேஜ்களோடு காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள்.

வாசல் கதவு வெறுமனே சாத்தப்பட்டிருக்க, தள்ளிக்கொண்டு உள்ளே போனாள்.

ஹால் வெறுமையாய் வந்தது. லக்கேஜ்களைக் கீழே போட்டுவிட்டு உட்பக்கம் பார்த்து குரல் கொடுத்தாள்.

''அக்கா...!''

பத்து விநாடி அமைதிக்குப் பிறகு - பக்கவாட்டு அறையிலிருந்து ஷர்மிலி வெளிப்பட்டாள்.

கிட்டத்தட்ட ஸிம்ஹாவின் சாயல். ஒடிசலான உடம்பு வாகு. துளியும் சிரிப்பில்லாத முகம்.

ஸிம்ஹா ஷர்மிலியைப் பார்த்தும் அதிர்ந்து போய்

கண்களைவிரித்தாள்.

''அக்கா...! உனக்கு என்னாச்சு...? ஏன் இப்படி இருக்கே...?''

ஷர்மிலி சிரிக்க முயன்று தோற்றாள்.

''எப்படி இருக்கேன்...? நல்லாத்தானே இருக்கேன்...?''

''நோ...! நீ சரியில்லை.. அத்தான் எங்கே?''

ஷர்மிலி பதில் சொல்லாமல் மௌனமாய் நின்றாள். பார்வை கீழே தாழ்ந்து இருந்தது.

''அக்கா...! உன்னைத்தான்...''

''என்ன...?''

''அத்தான் எங்கேன்னு கேட்டேன்...?''

ஷர்மிலி எதும் பேசாமல் இடது கையை மட்டும் உயர்த்தி பின்பக்கச் சுவரைக் காட்டினாள். அவள் சுட்டிக் காட்டிய திசையில் ஸிம்ஹாவின் பார்வை போயிற்று.

சுவரில் ஷர்மிலியின் கணவன் தயாநிதியின் போட்டோ ரோஜா மாலையோடு தெரிய, சொருகி வைக்கப்பட்டிருந்த ஊதுபத்தி சோம்பலாய் புகைந்து கொண்டிருந்தது.

# 3

விஜேஷ் தன் கையில் வைத்திருந்த போட்டோவையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க, வந்த அந்த இளைஞன் கோணலாய்ப் புன்னகைத்தான்.

''என்ன ஸார்...! போட்டோவைப் பார்த்ததும் அதிர்ச்சியாயிட்டீங்க போலிருக்கு...? உங்களைத் தீர்த்துக் கட்டிட்டு நான் போலீஸ்ல மாட்டிக்கக் கூடாது. அதுக்கு உங்க யோசனையும் ஒத்துழைப்பும் வேணும்...'' சொல்லிக் கொண்டே அவன் இடுப்புப் பகுதிக்கு கையைக் கொண்டு போய் அந்த பிஸ்டலை எடுத்தான்.

விஜேஷ் உறைந்தான்.

அவன் அதே கோணல் சிரிப்போடு தொடர்ந்தான்.

''நீங்க இருக்கிற இடத்தைவிட்டு ஒரு மில்லி மீட்டர் நகர்ந்தாலும் இந்த பிஸ்டலுக்கு அந்த விநாடியே நான் வேலை கொடுக்க வேண்டியிருக்கும்...''

விஜேஷ் சிரமமாய் எச்சில் விழுங்கி விட்டு கேட்டான்.

''எ... என் மேல் உனக்கு என்ன பகை...? எதுக்காக நீ



என்னைக்கொல்லனும்...?"

"இந்நேரம் நீ பண்ணின தப்பு உன்னோட ஞாபகத்துக்கு வந்திருக்கணுமே..." ஒருமையில் பேச ஆரம்பித்தான் அவன்.

"நான் எந்தத் தப்பும் பண்ணினது கிடையாது. இந்த சினிஃபீல்டில் இருந்தாலும் எந்த கெட்ட பழக்கமும் எனக்கு கிடையாது. என் மனைவியைத் தவிர வேற ஒரு பொண்ணை மனசளவில்கூட நினைச்சுப் பார்த்தது கிடையாது..."

அவன் சிரித்தான். "உனக்கு நீயே சர்ட்டிஃபிகேட் குடுத்துக்கறியா...? நீ யார், எப்பேர்ப்பட்டவன்னு எனக்குத் தெரியும். ஊரை ஏமாத்தலாம் நீ... ஆனா என்னை நீ ஏமாத்த முடியாது... நீ இன்னும் பத்து நிமிஷத்துக்குள்ளே சாகணும்..."

"பொறு... அவசரப்படாதே...! யாரோ உனக்கு தப்பா எதையோ சொல்லிக்கொடுத்து என்னைக் கொல்றதுக்காக ஏவிவிட்டிருக்காங்கன்னு நினைக்கிறேன்."

பிஸ்டலால் முன் நெற்றியைக் கீறிக் கொண்டான் அவன்.

"யாரும் எனக்கு எதுவும் சொல்லித் தரலை. இது நானாக எடுத்த முடிவு..." சொன்னவன் தன் இடதுகையை ஜிப்பா பகுதிக்குள் விட்டு சின்னதாய் ஒரு நைலான் கயிற்றுச் சுருளையும், ஒரு சிறிய பாட்டிலையும் எடுத்து டீபாயின் மேல் வைத்தான்.

"விஜேஷ்! உனக்கு பத்து நிமிஷம் டயம் தர்றேன். அதுக்கப்புறம் நீ உயிரோடு இருக்கக்கூடாது. நீ மரணத்தை தழுவிக்க இங்கே உனக்கு மூணு வழிகள் இருக்கு. உடம்புக்குள்ளே தோட்டா பாய்ஞ்சு ரத்தத்தை கொஞ்சம் கொஞ்சமா சிந்தி உயிரைக் கொஞ்சம் கொஞ்சமா விடறது ஒரு கொடுமையான அனுபவம். அதுக்குப் பதிலா நீ உயிரை சுலபமா விடறதுக்காக ரெண்டு சாய்ஸ் இந்த டீபாய் மேல இருக்கு. ஒண்ணு நைலான் கயிற்றுச் சுருள். ரெண்டாவது பாட்டிலில் இருக்கிற சயனைட்."

விஜேஷ் வியர்த்து வழிந்து கொண்டு உட்கார்ந்திருக்க, அவன் தொடர்ந்தான்.

"என்னைக் கேட்டா கயித்துல தொங்கி உயிரை விட்டா



பார்க்க அசிங்கமாயிருக்கும். நாக்கு வெளியே தள்ளி கண்ணு ரெண்டும் பிதுங்கி பார்க்கவே கோரமாயிருக்கும். பேசாமே சயனைடை செலக்ட் பண்ணிக்கோ விஜேஷ்... ஒரு சிட்டிகை எடுத்து வாய்ல போட்டா போதும்... வேதனை, உபாதை ரெண்டே ரெண்டு நிமிஷம்தான். நீட்டா செத்துடலாம். ரத்தம் ஒரு துளி வேஸ்டாகாது..."

"வே... வேண்டாம்..."

விஜேஷ் எழ முயல-

அவன் கையில் இருந்த பிஸ்டல் பாம்பு மாதிரி சட்டென்று தலை தூக்கியது.

"அப்படியே உட்காரணும்..."

விஜேஷ் உட்கார்ந்தான்.

"உனக்கு யோசிக்க பத்து நிமிஷ அவகாசம்...! இந்த பத்து நிமிஷத்துக்குள்ளே கயிறு, சயனைட் - இந்த ரெண்டுக்குள்ளே ஏதாவது ஒண்ணை நீ தொட்டேயாகணும். இல்லேன்னா பதினோராவது நிமிஷம் இந்த சைலன்ஸர் பிஸ்டல் சத்தம் காட்டாமே உன்னோட இருதயத்துக்கு ஒரு தோட்டாவை அனுப்பி வைக்கும். செத்துப்போக எது சுலபமான வழின்னு நீயே தீர்மானம் பண்ணி ஒரு முடிவுக்கு வா."

பிஸ்டல் விஜேஷின் மார்பைக் குறிபார்க்க ஆரம்பித்தது.

## 4

ஸிம்ஹா அதிர்ந்து போனவளாய் ஷர்மிலியைப் பார்த்தாள். பார்வையை நீர்த்திரை மறைத்தது.

"அ... அக்கா...! அத்தானுக்கு.... எ... என்னாச்சு...?"

ஷர்மிலி அழுகையில் வெடித்தவளாய் ஓடி வந்து ஸிம்ஹாவின் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

"ஸி... ம்... ஹா...!"

"அக்கா...!" ஷர்மிலியை சிறிது நேரம் அழவிட்டு மறுபடியும் கேட்டாள்.

"அத்தானுக்கு என்னாச்சு...?"

"ஹா... ஹார்ட் அட்டாக்..."

"முப்பத்தஞ்சு வயசுல ஹார்ட் அட்டாக்கா...? எப்பே

நடந்தது...?"

''மூ... மூ... மூணு மாசத்துக்கு மு... முந்தி...''

''என்னது! மூணு மாசத்துக்கு முந்தியா...? எனக்கு ஏன் தகவல் கொடுக்கலை...?''

''உன்னோட படிப்பு இந்த நியூஸ் மூலமா 'டிஸ்டர்ப்' ஆகக்கூடாதுன்னுதான்...''

''என்னக்கா... நீ...! மனுஷங்களைவிட படிப்பா முக்கியம்?''

ஷர்மிலி பதில் சொல்லாமல் அழுது கொண்டிருக்க, ஸிம்ஹா கண்ணீரோடு உலுக்கினாள்.

''அக்கா...! அத்தான் நல்லா ஹெல்த்தியாத்தானே இருந்தார். அவர்க்கு எப்படி ஹார்ட் அட்டாக் வந்தது?''

ஷர்மிலி கண்ணீரை சேலைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டு கம்மிப்போன குரலோடு பேச ஆரம்பித்தாள்.

''அன்னிக்கு நான் ஒரு கல்யாண ரிசப்ஷனுக்குப் போய்ட்டு ராத்திரி பத்துமணிக்கு மேல் வீடு திரும்பினேன். டி.வி. பார்த்துக்கிட்டிருந்த உன் அத்தான் வந்து கதவைத் திறந்தார். ரிசப்ஷன் நல்லா நடந்ததான்னு கேட்டார். அதுக்கப்புறம் நாங்க ரெண்டு பேரும் ஒண்ணா உட்கார்ந்து டி.வி.யில் ஒரு படம் பார்த்துட்டிருந்தோம்... பனிரெண்டு மணிக்கு படுக்கப்போனோம். நான் படுத்ததுமே தூங்கிட்டேன். திடீர்னு ஏதோ சத்தம் கேட்டது. தூக்கம் கலைஞ்சு நான் பார்த்தப்ப உன் அத்தான் நெஞ்சை பிடிச்சுக்கிட்டு துடிச்சிட்டிருந்தார். நான் உடனே நம்ம ஃபேமிலி டாக்டர்க்கு போன் பண்ணினேன். அவர் வந்தார். ஊசி போட்டு நார்மலுக்கு கொண்டு வந்தார். அதுக்கப்புறம் ஹாஸ்பிட்டலைஸ் பண்ணினோம். ஐ.ஸி. யூனிட்டில் வெச்சு ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்கும் போதே உன்னோட அத்தானுக்கு ரெண்டாவது தடவையா ஹார்ட் அட்டாக் வந்தது. டாக்டர்ஸ் வந்து எவ்வளவோ ட்ரை பண்ணிப் பார்த்தாங்க. காப்பாத்த முடியலை...''

ஸிம்ஹா தன் உதட்டைக் கடித்து அழுகையை அடக்கினாள்.

''அத்தானுக்கு ஹார்ட் அட்டாக்கா...? என்னால [illegible]வ முடியலையே... நம்ம ஃபேமிலி டாக்டர் [illegible]ச ராகவன் என்ன சொன்னார்...?''

[illegible] ன் அட்டாக்... இது! யார்க்கும் எந்த வயசிலும்



வரலாம்ன்னு சொல்றார்...''

சில விநாடிகள் அமைதி காத்த ஸிம்ஹா கேட்டாள்.

''இப்படி ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்பட்டிருக்கும் போது அதை எனக்கு தெரிவிக்காமே இருக்க உன்னால எப்படி முடிஞ்சுது அக்கா...?''

ஷர்மிலியின் கண்களில் இப்போது புதிதாய் நீர் சுரந்தது.

''ஸிம்ஹா...! எனக்கும் மனசு தாளலைதான். இருந்தாலும் இந்த வெளிநாட்டு படிப்பு உன்னோட லட்சியக் கனவாயிருந்தது. இனி மூணு மாச கோர்ஸே பாக்கியிருக்கும் போது இப்படியொரு நியூஸ் உனக்கு வந்தா அதை உன்னால தாங்கிக்க முடியுமா...? அப்படியே தாங்கிக்கிட்டாலும் மேற்கொண்டு உன்னால படிக்க முடியுமா என்ன...? தூங்கற நேரம் தவிர மத்த நேரமெல்லாம் நீ என்னைப்பத்தித்தான் நினைச்சுக்கிட்டு இருப்பே...! போனவர் போய்ச் சேர்ந்துட்டார். உனக்கு தகவல் குடுத்து நீ வந்து பார்த்து என்னாகப் போகுது...?''

ஷர்மிலி சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசலில் நிழலாடியது.

ஸிம்ஹா திரும்பிப் பார்த்தாள்.

அந்த இளைஞன் வாசல் கதவருகே தயக்கமாய் நின்று கொண்டிருந்தான். ஷர்மிலி அவசர அவசரமாய் கண்ணை துடைத்துக் கொண்டு சொன்னாள்.

''வாங்க... ராஜீவ்...! இதுதான் என்னோட சிஸ்டர் ஸிம்ஹா. ஹையர் எஜுகேஷனுக்காக ஃபாரின் போய்ட்டு இன்னிக்குத்தான் ரிடர்ன் ஆகியிருக்கா...''

அந்த ராஜீவ் உள்ளே வந்தான். நல்ல உயரம். விரிந்த தோள்கள். சம்மர் க்ராப்.

ஷர்மிலி ஸிம்ஹாவிடம் திரும்பினாள்.

''இவர் ராஜீவ். இதே தெருவில்தான் குடியிருக்கார். போலீஸ் க்ரைம் ப்ராஞ்சில் வேலை. உன்னோட அத்தானுக்கு ஃப்ரெண்ட்''

இருவரும் மெல்ல தலையசைத்து 'ஹலோ' சொல்லிக் கொண்டார்கள். ராஜீவ் சில விநாடிகள் மௌனித்துவிட்டு மெல்லிய குரலில் பேச்சை ஆரம்பித்தான்.

''மிஸ் ஸிம்ஹா...! உங்க அக்காவோட கணவர் தயாநிதியோட மரணத்தைப் பத்தி நீங்க என்ன

நினைக்கறீங்க?''

ஸிம்ஹா கண்ணீர் காயாத விழிகளோடு பெருமூச் விட்டாள்.

''நினைக்க என்ன இருக்கு...? இது இந்த வயசில அவர்க்கு வரக்கூடாத மரணம்...''

''வரக்கூடாத மரணம்...! ஆனா வரவழைக்கப்பட டிருக்குன்னு வெச்சுக்கலாமா...?''

''நீங்க சொல்றது புரியலை...''

''புரியும்படியாவே சொல்லிடறேன்! தயாநிதியோட மரணம் இயற்கையானது அல்ல. அவர்க்கு அந்த மரணத்தை யாரோ கொடுத்திருக்காங்க...''

''கொலையா...?''

''கொலையேதான்...!''

''விஷயத்தை போலீஸுக்கு கொண்டு போக வேண்டியதுதானே...?''

''என் கணவரோட மரணத்தில் சந்தேகம் இருக்குன்னு உங்க அக்கா ஷர்மிலி ஒரு கம்ப்ளைண்ட் எழுதி கமிஷனர்கிட்ட கொடுத்தாத்தான் போலீஸ் ஃபைலை ஓப்பன் பண்ண முடியும்...''

ஸிம்ஹா கோபமாய் ஷர்மிலியிடம் திரும்பினாள். ''ஏன்க்கா...! போலீஸ்ல ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்தா என்ன...?''

''உன் அத்தான் கொலை செய்யப்படலை. மரணம் இயற்கைதான்னு நம்ம டாக்டரே சொல்லிட்டாரே...! வீணா எதுக்கு பிரச்னையை பெரிசு பண்ணி அது எல்லா பேப்பர்ஸ்லேயும் வந்து... நாளைக்கு தெருவுல நாம நிம்மதியா நடக்க முடியாது ஸிம்ஹா...''

ஸிம்ஹா ராஜீவை ஏறிட்டாள். ''மிஸ்டர் ராஜீவ்...! அக்கா ஒரு பயந்தாங்கொள்ளி... கமிஷனர்கிட்ட எப்ப போலாம்?''

''காலையில பதினோரு மணிக்கு...?''

''போலாம்...''

''ஸிம்ஹா...!''

''நீ சும்மாயிருக்கா...! அத்தானோட மரணத்தை என்னால ஜீரணிக்க முடியலை. போலீஸ்க்கு போய்த்தான் தீரணும்.''

# 5

விஜேஷ் வியர்த்துக் கொண்டு அந்த பிஸ்டலையே பார்த்துக் கொண்டிருக்க, அவன் சிரித்தான்.

''பத்து நிமிஷ அவகாசம் கொடுத்திருக்கானே...? அந்த அவகாசத்தைப் பயன்படுத்தி தப்பிக்க முடியுமான்னு யோசனை பண்ணாதே... உன்னால தப்பிக்க முடியாது. அதுக்கான மார்க்கமும் இல்லை. சீக்கிரமா ஏதாவது ஒண்ணை செலக்ட் பண்ணு.''

விஜேஷ் அசையாமல் அப்படியே உட்கார்ந்திருக்க - நேரம் பத்து நிமிஷத்திலிருந்து எட்டு நிமிஷமாகக் குறைந்தது.

அவன் கையில் இருந்த பிஸ்டல் உஷாராகி உயர்ந்து தாழ்ந்து விஜேஷை அளவெடுத்தது.

எட்டு நிமிஷம் ஏழாயிற்று.

ஆறு...

ஐந்து...

நான்கு... மூன்று... இரண்டு.

விஜேஷ் சயனைட் இருந்த பாட்டிலை எடுத்தான். அந்த இளைஞன் சிரித்தான்.

''யுவர் சாய்ஸ் ஈஸ் கரெக்ட். உயிர் போக சில விநாடிகள் போதும்...''

கையில் பாட்டிலை எடுத்த விஜேஷ் அதை வாய்க்கு கொண்டு போவது போல பாவ்லா செய்து அந்த இளைஞன் எதிர்பார்க்காத ஒரு மைக்ரோ விநாடியில் அவனுடைய முகத்தைக் குறிபார்த்து அடித்தான்.

சயனைட் பாட்டில் சரியாய் நெற்றிப் பொட்டைத் தாக்க, சின்னதாய் அலறிக் குனிந்தான். வலியை ஜீரணித்து நிமிர்வதற்குள் விஜேஷின் வலது கால் குபீரென்று உயர்ந்து அவனுடைய கையில் இருந்த பிஸ்டலைத் தட்டி விட்டது. எகிறிப் போய் விழுந்த பிஸ்டலை விநாடிக்கும் குறைவான நேரத்தில் சேகரித்துக் கொண்டான் விஜேஷ்.

நெற்றிப் பொட்டில் சின்னதாய் ஒரு ரத்தக்காயம் உற்பத்தியாகியிருக்க, அந்த இளைஞன் விஜேஷின் கையில் இருந்த பிஸ்டலைப் பறிப்பதற்காகப் பாய்ந்தான்.

விஜேஷ் நகர்ந்து கொண்டு அவனுடைய முதுகில் எட்டி உதைக்க, டீபாயில் போய் முட்டிக்கொண்டு மல்லாந்து விழுந்தான்.

விழுந்தவன் எழவில்லை.

அப்படியே கிடந்தான். கனமான டீபாயின் முனை தலையை பலமாய் தாக்கியிருக்க, ஒரு தற்காலிக மயக்கத்துக்குப் போயிருந்தான்.

விஜேஷ் வேக நடையில் டெலிபோனைத் தொட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு டயல் செய்தான். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டதும் விஜேஷ் கேட்டான்.

''இன்ஸ்பெக்டர் சார்லஸ் ப்ளீஸ்''

''ஹோல்டிங்...''

''மிஸ்டர் சார்லஸ்...! நான் விஜேஷ்...''

''சினி டைரக்டர்...?''

''எஸ்...''

''என்ன ஸார்... இந்த நேரத்தில் போன்...? ஏதாவது பிரச்னையா...?''

''எஸ்...''

''சொல்லுங்க...''

''என்னை ஒருத்தன் மர்டர் பண்ண வந்தான்...''

''யா... யாரது...?''

''அது யார்ன்னு தெரியலை'' என்று ஆரம்பித்த விஜேஷ் நடந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் இரண்டு நிமிஷம் செலவழித்து சொல்லி முடித்தான்.

சார்லஸ் கேட்டார்.

''இப்போ அவன் மயக்கமா கிடக்கிறானா...?''

''ஆமா...''

''உடனடியா ஒரு காரியம் பண்ணுங்க விஜேஷ்...''

''என்ன...?''

''அவனை ஒரு ரூமுக்குள்ள இழுத்து போட்டு லாக் பண்ணி வையுங்க... நான் இப்ப புறப்பட்டு பத்து நிமிஷத்துல வந்துடறேன்''

சார்லஸ் ரிஸீவரை வைத்துவிட, விஜேஷும் ரிஸீவரை வைத்துவிட்டு மயங்கி விழுந்துகிடந்த இளைஞனிடம் வந்தான். இரண்டு கால்களையும் பிடித்து தாதரவென்று இழுத்துக் கொண்டு போய் தன் படுக்கையறைக்குள்



போட்டு கதவைச் சாத்தி வெளிப்பக்கமாய் தாழிட்டான்.

ஹால் சோபாவுக்கு வந்து சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

'யார் இவன்...?'

'எனக்கும் இவனுக்கும் என்ன பகை?'

குழப்பமான யோசிப்பில் பதினைந்து நிமிஷங்கள் காணாமல் போயிருந்தபோது வாசலில் போலீஸ் ஜீப் சத்தம் கேட்டது.

விஜேஷ் எழுந்து போய் அவரை எதிர் கொண்டு உள்ளே கூட்டி வந்தான்.

''வாங்க... சார்லஸ்...!''

''அவனை ரூம்ல போட்டு லாக் பண்ணிட்டீங்களா?''

''ம்....''

''எந்த ரூம்...?''

''என்னோட பெட் ரூம்....''

''வாங்க பார்க்கலாம்''

உள்ளே போனார்கள்.

பெட் ரூமுக்கு முன்னால் போய் நின்றார்கள். விஜேஷ் லாக்கை விடுவித்து கதவைத் தள்ள அது உள்ளே போயிற்று. நுழைந்தார்கள்.

அறை வெறிச்சோடிப் போயிருக்க -

அவன் இல்லை.

## 6

போலீஸ் கமிஷனர் சக்ரபாணி தனக்கு எதிரில் உட்கார்ந்திருந்த ஸிம்ஹாவையும் ராஜீவையும் தீர்க்கமான பார்வை பார்த்துவிட்டு தோள்களைக் குலுக்கினார்.

''தயாநிதி கொலை செய்யப்பட்டிருப்பார்ன்னு நான் நினைக்கலை. என்னா டாக்டர்ஸ் ரிப்போர்ட்டும் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டும் க்ளியரா அது இயற்கையான மரணம்தான்னு சொல்லியிருக்கு. டெத்பை ஹார்ட் அட்டாக்ன்னு ரெண்டு ரிப்போர்ட்டுமே ஸ்ட்ராங்கா சொல்லும்போது இதுல கொலை எங்கேயிருந்து வந்தது...?''

''நோ... ஸார்...! என் அக்காவோட கணவர் தயாநிதிக்
ஹார்ட் அட்டாக் வரக்கூடிய வயசு கிடையாது. ஹி வாஸ்
ஏ ஹெல்த்தி பர்ஸன். ஒரு தலைவலி காய்ச்சல்ன்னு
என்னிக்குமே அவர் படுத்தது இல்லை.''

''அவர் லிக்கர் கன்ஸ்யூம் பண்ற நபர். அது உங்களு
குத் தெரியுமா...?''

''தெரியும். பட் அவர் குடிகாரர் கிடையாது. ஹி ஈஸ் நா
அடிக்ட்... பிசினஸ் விவகாரங்களில் டென்ஷனாயிரு
கும்போது ஒரு பெக் அடிப்பார். மீறிப் போனா இன்னொரு
பெக். அவ்வளவுதான்.''

''எவ்வளவு சாப்பிட்டாலும் குடி குடிதானே! ஹார்
அட்டாக் வர ஆல்கஹால் ஒரு முக்கிய காரணம்''

ராஜீவ் குறுக்கிட்டான்.

''ஸார்...! தயாநிதியோட மரணம் 100 சதவிகிதம்
பர்ஃபெக்ட் மர்டர். அதை கொலைன்னு தெரியாதபடிக்கு
யாரோ பண்ணியிருக்காங்க. விசாரணையை இன்னும்
கொஞ்சம் ஆழப்படுத்தினா எப்படியும் உண்மை
வெளியே வரும் ஸார்.''

''புகாரை குடுத்துட்டு போங்க. நான் என்னோட ஹை
அஃபீசியல்ஸ்கிட்டே பேசிட்டு முடிவு சொல்றேன்''

''ஸார்! இந்த விஷயத்தை காலந்தாழ்த்தக் கூடாது
ஏற்கெனவே மூணு மாசம் போயிடுச்சு...'' ஸிம்ஹா சொல்ல
கமிஷனர் லேசாய் கோபப்பட்டார்.

''உங்க அவசரத்துக்கு நான் எதையும் பண்ண முடியாது
இப்படி முடிஞ்சு போன ஒவ்வொரு கேஸையும் தூசு தட்டி
பார்த்துக்கிட்டிருந்தா புதுசா வர்ற கேஸ்களை எப்படி டீல்
பண்றது....?''

''அதுக்காக உண்மைகள் மூடி மறைக்கப்படலாமா
ஸார்...? தயாநிதியோட மரணத்துக்கு காரணமான நபரை
தப்பிக்க விடலாமா...?''

''அது கொலைன்னு நீங்களே தீர்மானம் பண்ணிட்டு
பேசறது சரியில்லை... அது இயற்கையான மரணம்ன்னு
அடித்து சொல்லக்கூடிய டாக்டர்ஸ் ரிப்போர்ட்டும் பி.எம்
பண்ணின ரிப்போர்ட்டும் இருக்கும் போது நீங்க கொடுக்க
வேண்டிய புகாரை வாங்க வேண்டிய அவசியமில்லை.''

''ஸார்...! வந்து...''



''புகாரை கொடுத்துட்டு போங்க. வேற எதுவும் பேச வேண்டாம்....''

''ஸார்...! எங்க கோரிக்கை என்னான்னா...''

''ஸாரி... ப்ளீஸ் அவுட்...! நான் பார்க்க வேண்டிய ஃபைல்ஸ் நிறைய இருக்கு... உங்ககிட்ட வெட்டியா பேசிட்டிருக்க எனக்கு நேரம் கிடையாது.''

சொன்னவர் டெலிபோனை இழுத்து வைத்துக் கொண்டு ரிஸீவரை எடுத்து காதுக்கு பொருத்திக் கொண்டு யாங்கோ டயல் செய்ய ஆரம்பிக்க, ஸிம்ஹாவும் ராஜீவும் எழுந்தார்கள்.

''வர்றோம்... ஸார்...''

''ம்... ம்...''

வெளியே வந்தார்கள்.

''என்ன ராஜீவ்... கமிஷனர் இப்படி கடுவன் பூனை மாதிரி இருக்கார்.''

''ரிட்டையர்மெண்ட் ஸ்டேஜ்ல எதுக்கு பிரச்னைன்னு பார்க்கிறார்....''

''நாம குடுத்த புகார் என்னாகும்...?''

''குப்பைத் தொட்டிக்கு போயிடும்னு நினைக்கிறேன்...''

''அடுத்தபடியா என்ன பண்ணலாம் ராஜீவ்...?''

''உங்க ஃபேமிலி டாக்டரைப் போய்ப் பார்க்கணும்''

''பார்த்து...''

''தயாநிதிக்கு ஹார்ட் அட்டாக்ன்னு ரிப்போர்ட் கொடுத்தது அவர்தான். அவரைக் கொஞ்சம் கிளறிப் பார்த்தா என்ன...?''

''ரிப்போர்ட்ல இயற்கையான மரணம்ன்னு எழுதிக் கொடுத்தவர் வேற என்ன சொல்லுவார்...?''

''எதுக்கும் பேசிப் பார்க்கலாமே...?''

''சரி... வாங்க....''

இருவரும் காரில் பயணித்து ஸிம்ஹாவின் குடும்ப டாக்டர் சீனிவாசராகவனைப் போய் பார்த்த போது அவர் அப்போதுதான் ஒரு ஆப்ரேஷனை முடித்துவிட்டு அறைக்குத் திரும்பியிருந்தார். ஸிம்ஹாவைப் பார்த்ததும் மலர்ந்தார்.

''அட... ஸிம்ஹாவா...? எப்பம்மா ஃபாரின்லயிருந்து

''நோ... ஸார்...! என் அக்காவோட கணவர் தயாநிதிக்கு ஹார்ட் அட்டாக் வரக்கூடிய வயசு கிடையாது. ஹி வாஸ் ஏ ஹெல்த்தி பர்ஸன். ஒரு தலைவலி காய்ச்சல்ன்னு என்னிக்குமே அவர் படுத்தது இல்லை.''

''அவர் லிக்கர் கன்ஸ்யூம் பண்ற நபர். அது உங்களுக்குத் தெரியுமா...?''

''தெரியும். பட் அவர் குடிகாரர் கிடையாது. ஹி ஈஸ் நாட் அடிக்ட்... பிசினஸ் விவகாரங்களில் டென்ஷனாயிருக்கும்போது ஒரு பெக் அடிப்பார். மீறிப் போனா இன்னொரு பெக். அவ்வளவுதான்.''

''எவ்வளவு சாப்பிட்டாலும் குடி குடிதானே! ஹார்ட் அட்டாக் வர ஆல்கஹால் ஒரு முக்கிய காரணம்''

ராஜீவ் குறுக்கிட்டான்.

''ஸார்...! தயாநிதியோட மரணம் 100 சதவிகிதம் பர்ஃபெக்ட் மர்டர். அதை கொலைன்னு தெரியாதபடிக்கு யாரோ பண்ணியிருக்காங்க. விசாரணையை இன்னும் கொஞ்சம் ஆழப்படுத்தினா எப்படியும் உண்மை வெளியே வரும் ஸார்.''

''புகாரை குடுத்துட்டு போங்க. நான் என்னோட ஹை அஃபீசியல்ஸ்கிட்டே பேசிட்டு முடிவு சொல்றேன்''

''ஸார்! இந்த விஷயத்தை காலந்தாழ்த்தக் கூடாது. ஏற்கெனவே மூணு மாசம் போயிடுச்சு...'' ஸிம்ஹா சொல்ல கமிஷனர் லேசாய் கோபப்பட்டார்.

''உங்க அவசரத்துக்கு நான் எதையும் பண்ண முடியாது. இப்படி முடிஞ்சு போன ஒவ்வொரு கேஸையும் தூசு தட்டி பார்த்துக்கிட்டிருந்தா புதுசா வர்ற கேஸ்களை எப்படி டீல் பண்றது....?''

''அதுக்காக உண்மைகள் மூடி மறைக்கப்படலாமா ஸார்...? தயாநிதியோட மரணத்துக்கு காரணமான நபரை தப்பிக்கவிடலாமா...?''

''அது கொலைன்னு நீங்களே தீர்மானம் பண்ணிட்டு பேசறது சரியில்லை... அது இயற்கையான மரணம்ன்னு அடித்து சொல்லக்கூடிய டாக்டர்ஸ் ரிப்போர்ட்டும் பி.எம். பண்ணின ரிப்போர்ட்டும் இருக்கும் போது நீங்க கொடுக்க வேண்டிய புகாரை வாங்க வேண்டிய அவசியமில்லை.''

''ஸார்...! வந்து...''



''புகாரை கொடுத்துட்டு போங்க. வேற எதுவும் பேச வேண்டாம்....''

''ஸார்...! எங்க கோரிக்கை என்னான்னா...''

''ஸாரி... ப்ளீஸ் அவுட்...! நான் பார்க்க வேண்டிய ஃபைல்ஸ் நிறைய இருக்கு.. உங்ககிட்ட வெட்டியா பேசிட்டிருக்க எனக்கு நேரம் கிடையாது.''

சொன்னவர் டெலிபோனை இழுத்து வைத்துக் கொண்டு ரிஸீவரை எடுத்து காதுக்கு பொருத்திக் கொண்டு யார்க்கோ டயல் செய்ய ஆரம்பிக்க, ஸிம்ஹாவும் ராஜீவும் எழுந்தார்கள்.

''வர்றோம்... ஸார்...''

''ம்... ம்...''

வெளியே வந்தார்கள்.

''என்ன ராஜீவ்... கமிஷனர் இப்படி கடுவன் பூனை மாதிரி இருக்கார்.''

''ரிட்டையர்மெண்ட் ஸ்டேஜ்ல எதுக்கு பிரச்னைன்னு பார்க்கிறார்....''

''நாம குடுத்த புகார் என்னாகும்...?''

''குப்பைத் தொட்டிக்கு போயிடும்ன்னு நினைக்கிறேன்...''

''அடுத்தபடியா என்ன பண்ணலாம் ராஜீவ்...?''

''உங்க ஃபேமிலி டாக்டரைப் போய்ப் பார்க்கணும்''

''பார்த்து...''

''தயாநிதிக்கு ஹார்ட் அட்டாக்ன்னு ரிப்போர்ட் கொடுத்தது அவர்தான். அவரைக் கொஞ்சம் கிளறிப் பார்த்தா என்ன...?''

''ரிப்போர்ட்ல இயற்கையான மரணம்ன்னு எழுதிக் கொடுத்தவர் வேற என்ன சொல்லுவார்...?''

''எதுக்கும் பேசிப் பார்க்கலாமே...?''

''சரி... வாங்க....''

இருவரும் காரில் பயணித்து ஸிம்ஹாவின் குடும்ப டாக்டர் சீனிவாசராகவனைப் போய் பார்த்த போது அவர் அப்போதுதான் ஒரு ஆப்ரேஷனை முடித்துவிட்டு அறைக்குத் திரும்பியிருந்தார். ஸிம்ஹாவைப் பார்த்ததும் மலர்ந்தார்.

''அட... ஸிம்ஹாவா...? எப்பம்மா ஃபாரின்லயிருந்து

ரிட்டர்ன் ஆனே...?''

''இன்னிக்குக் காலையில்தான்....''

''ஹையர் ஸ்டடி எப்படியிருந்தது...?''

''வெரி யூஸ்ஃபுல்...''

சீனிவாசராகவன் ராஜீவைப் பார்த்தார். ''இவர்...?''

''ஃபேமிலி ஃப்ரண்ட். பேர் ராஜீவ்... அத்தான் தயாநிதிக்கு வேண்டியவர்....''

''ப்ளீஸ்... உட்காருங்க...''

உட்கார்ந்தார்கள்.

டாக்டர் ரிவால்விங் நாற்காலியில் ஒரு அரைச்சுற்று சுற்றிக் கொண்டே கேட்டார்.

''என்ன விஷயம் ஸிம்ஹா...?''

''அத்தானோட மரணத்தைப்பத்தி எனக்கொரு சந்தேகம்''

''என்ன சந்தேகம்...?''

''அவரோட மரணம் இயற்கையானதா....?''

''ஆமா... ஹார்ட் அட்டாக்....''

''எப்படி டாக்டர்....?''

''எப்படின்னு கேள்வி கேட்டா என்ன சொல்றது...? ஹார்ட் அட்டாக்ங்கிறது யார்க்கு வேணும்னாலும் எப்ப வேணும்ன்னாலும் வரக்கூடியது....''

ராஜீவ் குறுக்கிட்டான்.

''என்னால நம்ப முடியலை டாக்டர்.''

டாக்டர் சிரித்தார். ''என்னாலகூட தான் நம்ப முடியலை... பட் நம்பியாகணும்... யாரோட உயிர்க்கு எப்போ விடுதலைன்னு மேலே இருக்கிற ஒருத்தனுக்குத் தான் தெரியும்.:. நாங்க ட்ரீட்மெண்ட்தான் கொடுக்க முடியும். பட் பேஷண்ட் உயிரோடு இருப்பதும் இல்லாததும் கடவுளோட கையில்தான். தயாநிதிக்கு முதல்ல வந்தது மைல்ட் ஹார்ட் அட்டாக். அவரை உடனடியா ஹாஸ்பிட்டலைஸ் பண்ணி ட்ரீட்மெண்ட் கொடுத்துக் கிட்டிருக்கும்போதே ரெண்டாவது அட்டாக் வந்தது. உயிரைக் காப்பாத்த எவ்வளவோ முயற்சி பண்ணினோம். முடியலை...''

ஸிம்ஹா குரல் தழுதழுக்க குறுக்கிட்டாள். ''டாக்டர்...! நீங்க எங்க குடும்பத்துக்கு பல வருஷமா டாக்டரா



இருக்கீங்க. அந்த உரிமையில் உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கலாமா...?''

''என்னம்மா இது...! உனக்கில்லாத உரிமையா? தாராளமா நீ கேக்கலாம்...''

''அத்தானோட மரணம் இயற்கையானதா இருக்க முடியாதுன்னு எங்களுக்கு படுது... உங்களுக்கு அப்படிப் பட்ட சந்தேகம் ஏதாவது அடி மனசில் இருக்கா...?''

டாக்டர் புன்னகைத்தார்.

''அப்படிப்பட்ட சந்தேகம் ஒரு பர்சன்ட் கூட கிடையாது. இட் வாஸ் வெரி க்ளியர் ஸ்டேட்மெண்ட். உன் அக்காவோட கணவர் கொலை செய்யப்பட்டிருக்க சாத்தியமே கிடையாது. ஹண்ட்ரட் பர்சன்ட் ஹார்ட் அட்டாக்.''

''ஆர்... யூ... ஷ்யூர் டாக்டர்...?''

''சர்ட்டன்லி...''

ஸிம்ஹாவும் ராஜீவும் மேலும் சில விநாடிகள் பேசிக் கொண்டிருந்துவிட்டு எழுந்தார்கள்.

''ஓ... கே... டாக்டர்... நாங்க புறப்படறோம்.''

''ஸிம்ஹா...! இனிமே நீதான் உன்னோட அக்காவுக்கு பக்கத்துணையா இருக்கணும். விரக்தி மனப்பான்மை யோடு இருக்கிற உங்க அக்காவோட வாழ்க்கைக்கு நீதான் புத்துயிர் ஊட்டணும். அவளை ஏதாவது ஒரு கம்ப்யூட்டர் சென்டர்க்கு அனுப்பி எதையாவது கத்துக்கச் சொல்லு....''

''சரி டாக்டர்...! இன்னிக்குத்தான் நான் ஃபாரினி லிருந்து திரும்பியிருக்கேன். இனிமேதான் அக்காவோட வாழ்க்கையைப் பத்தி யோசிக்கணும்...''

ஸிம்ஹாவும் ராஜீவும் டாக்டரின் அறையினின்றும் வெளிப்பட்டு வராந்தாவில் நடந்தார்கள்.

''ராஜீவ்...!''

''ம்...''

''ஒருவேளை என் அத்தானோட மரணம் இயற்கை யானதுதானோ? நாமதான் அநாவசியத்துக்கு சந்தேகப் பட்டுக்கிட்டு இருக்கோமோ?''

''எனக்கும் இப்போ அந்த சந்தேகம்தான்....! தயாநிதிக்கு குடிப்பழக்கம் இருந்திருக்கு. ஹெல்த்தை ஸ்பாய்ல் பண்ண குடிப்பழக்கம் ஒண்ணே போதும்...''

''இந்தப் பிரச்னைக்கு ஒரு முற்றுப் புள்ளி வெச்சுடலாமா...? இல்ல 'கமா' போட்டு கன்டினியூ பண்ணிக்கிட்டு போலாமா....?''

''இன்னும் ரெண்டு நாள் யோசனை பண்ணுவோம். அப்புறமா ஒரு முடிவுக்கு வருவோம்...''

பேசிக்கொண்டே கார்க்கு வந்தார்கள். காரின்ட்ரைவிங் இருக்கைக்கு சாய்ந்த ஸிம்ஹறா ''அடடே!'' என்று சொல்லி நெற்றியைத் தேய்த்துக்கொள்ள, ராஜீவ் கேட்டான்.

''என்ன ஸிம்ஹறா....?''

''கார் சாவியை டாக்டர் டேபிள் மேலேயே வெச்சுட்டேன் போலிருக்கு....''

''நீங்க கார்லயே இருங்க... நான் போய் எடுத்துக்கிட்டு வர்றேன்...''

ராஜீவ் கிளம்பிப் போனான். ஹாஸ்பிட்டல் வராந்தாவில் இரண்டு நிமிஷ வேக நடை.

டாக்டரின் அறை வந்தது. கதவு பாதி திறந்திருக்க - அதைத் தட்டுவதற்காக முயன்ற விநாடி - டாக்டர் சீனிவாசராகவனின் பேச்சுக்குரல் கேட்டது. டெலிபோனில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார். பேச்சில் ஸிம்ஹறாவின் பெயர் அடிபட்டது.

''ஆமா...! இப்பத்தான் ஸிம்ஹறாவும், அவகூட ஒரு யூத்தும் வந்துட்டுப் போறாங்க, தயாநிதியோட மரணத்தில் அவங்க ரெண்டு பேர்க்கும் ஏதோ சந்தேகம்... வந்திருக்கு... அது கொலைதான்ங்கிற முடிவுல அவங்க இருக்காங்க. தயாநிதியோட மரண விவகாரத்தை அவங்க கிளறவும் ஆரம்பிச்சுட்டாங்க. அவங்களை ஆரம்பத்திலேயே கட்டுப் படுத்தி வைக்கலைன்னா பிரச்னை பெரிசாகி எல்லா உண்மைகளும் வெளியே வந்து நீங்களும் நானும் மாட்டிக்க வேண்டியிருக்கும்....''

சில விநாடிகள் மௌனம். பின் மீண்டும் டாக்டரின் குரல் கேட்டது.

''பயப்படாதீங்கன்னு நீங்க சொல்றீங்க. அவங்க ரெண்டு பேரும் வந்துட்டு போனபிறகு என்னோட பி.பி. எக்கச் சக்கமாயிருச்சு. நீங்க சொன்னீங்கங்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் தயாநிதியோட டெத் இயற்கை மரணம்ன்னு ரிப்போர்ட் கொடுத்தேன். யாரும்



சந்தேகப்படப் போறதில்லைன்னு சொன்னீங்க. ஆனா இன்னிக்கு எம் முன்னாடி வந்து உட்கார்ந்துட்டாங்களே. ஸிம்ஹறா லேசுபட்டவ கிடையாது. கெட்டிக்காரி. ஃபாரின் போய் படிச்சுட்டு வந்துருக்கா.''

டாக்டர் பேசிக்கொண்டே போக - வெளியே நின்றிருந்த ராஜீவ் அப்படியே பின்வாங்கி திகைத்து நின்றான். சில விநாடிகள் கழித்து ஒரு முடிவுக்கு வந்தவனாய், பாதி திறந்திருந்த கதவைத் தட்டி, திறந்ததும் உள்ளே போய் டாக்டரிடம் சொல்லிவிட்டு டேபிள் மேலேயிருந்து கார்சாவியை எடுத்துக் கொண்டு வராந்தாவுக்கு வந்து வேக வேகமாய் நடந்து காரில் உட்கார்ந்திருந்த ஸிம்ஹறாவிடம் வந்தான்.

# 7

இன்ஸ்பெக்டர் சார்லஸும் விஜேஷும் ஒருத்தரையொருத்தர் குழப்ப முகங்களோடு பார்த்துக் கொண்டார்கள்.

சார்லஸ் கேட்டார்.

''என்ன மிஸ்டர் விஜேஷ்...! ஆளைக் காணோம்?''

''இந்த ரூமுக்குள்ளேதான் அடைச்சு வெச்சேன்... பார்த்தீங்களா... அவனோட தலைக்காயத்திலிருந்து சிந்தின ரத்தம்.''

விஜேஷ் மார்பிள் தரையைச் சுட்டிக்காட்ட - ரத்தம் கோடு கோடாய் இழுபட்டிருந்தது.

''எப்படி தப்பிச்சான்....?''

அறையின் அட்டாச்ட் டாய்லட்டை நெருங்கி கதவைத் தள்ளிப் பார்த்தார்.

கதவு திறந்து கொள்ள உள்ளேயிருந்த ஸ்பார்டெக் தரைப் பரப்பிலும் ரத்தத்துளிகள் தெரிந்தன.

சார்லஸின் பார்வை உயர்ந்து ஜன்னலுக்குப் போக மெலிதாய் திடுக்கிட்டார்.

ஜன்னலின் ஸ்லைடிங் கண்ணாடிகள் கழட்டப்பட்டு ஜன்னல் இருந்த இடம் ஒரு சதுரப் பரப்பாய் தெரிந்தது.

டாய்லட் ஸிங்கின் மேல் காலை வைத்து மேலே ஏறி ஜன்னல் சதுரத்துக்குள் தலையை உள்ளே நுழைத்து வெளியே எட்டிப் பார்த்தார் சார்லஸ்.

பங்களாவின்பின்பக்கப்பகுதி அது. ட்ரய்னேஜ்குழாய் ஒன்று வசதியாய்கீழே போயிருந்தது.

சார்லஸ் எரிச்சலாகி வெளியே வந்தார். ''விஜேஷ்! அவன் மயக்கமாயிருக்கான்னு நீங்க நினைச்சது தப்பு. கொஞ்சம் காஷியஸா இருந்து இருக்கலாம்''

''நான் இதை எதிர்பார்க்கலை சார்லஸ்.''

''இட்ஸ் ஆல்ரைட்.... நீங்க அவனை நல்லா அடையாளம் பார்த்து இருக்கீங்க. அது போதும். அடையாளத்தை மட்டும் கரெக்டா துல்லியமா சொல்லுங்க... இருபத்தி நாலு மணி நேரத்துக்குள்ளே அவன் எங்கேயிருந்தாலும் மடக்கிடலாம். வந்தவனுக்கு என்ன வயசு இருக்கும்.,...?''

''இருபத்தஞ்சு இருக்கலாம். உயரமா ஒல்லியா இருந்தான். லைட் ப்ளூ கலர்ல கூலிங்கிளாஸ் போட்டிருந்தான்.''

''ட்ரஸ்...?''

''ஒயிட் பைஜாமா...''

''பேச்சைக் கவனிச்சீங்களா...? என்ன ஸ்லாங்க்ன்னு ஐடன்டிஃபை பண்ணமுடிஞ்சுதா...?''

''முடியலை...''

''குடி போதையில் இருந்தானா...?''

''இல்லை... அது மாதிரி தெரியலை...''

''அவன் வெச்சிருந்த பிஸ்டல் எங்கே...?''

விஜேஷ் எடுத்துக் கொடுக்க - சார்லஸ் வாங்கிப் பார்த்துவிட்டு புல்லட் சேம்பரை ஓப்பன் செய்தார்.

இரண்டு தோட்டாக்கள் நித்திரையில் இருந்தன.

''லோக்கல் மேக் மாதிரி தெரியுது... ஏதாவது ஒரு இல்லீகல் க்ரூப்கிட்டயிருந்து வாங்கியிருக்கான்னு நினைக்கிறேன்''

''சார்லஸ்! அவன் எதுக்காக என்னைக் கொல்ல வந்தான்னே தெரியலை... அவனுக்கும் எனக்கும் எந்தப் பகையும் கிடையாது. இதுக்கு முந்தி அவனை எந்த சந்தர்ப்பத்திலேயும் பார்த்ததுகூட கிடையாது.''

''டோண்ட் வொரி விஜேஷ்....! அவன் மறுபடியும் உங்களைத் தாக்க முயற்சி பண்றதுக்குள்ளே கண்டு பிடிச்சுடலாம். அவன் இந்த வீட்ல இருக்கும்போது எங்கே உட்கார்ந்திருந்தான்? எந்தெந்த பொருளைத்



தொட்டான்னு தெரியுமா...?''

''எதுக்கு...?''

''அவனோட கைரேகைகளைக் கலெக்ட் பண்ணிட்டா அவன் ஒரு பழைய குற்றவாளியா இல்ல புது குற்றவாளியான்னு தெரிஞ்சுடும். பழைய குற்றவாளியாயிருந்தா கைரேகைப் பதிவுகளை கம்பேர் பண்ணி ஆள் யாருங்கிறதை உடனடியா கண்டுபிடிச்சுடலாம்...''

விஜேஷ் கைகாட்டினான். ''அந்த நாற்காலியில் ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தான். இந்த நைலான் கயித்தைத் தொட்டான்''

''இது போதும்...''

சார்ல்ஸ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே டெலிபோன் அலறிக் கூப்பிட்டது.

விஜேஷ் ரிஸீவரை எடுக்க முயல, சார்லஸ் அவனைக் கையமர்த்திவிட்டு ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...''

''மிஸ்டர் விஜேஷ் ப்ளீஸ்...''

''நீங்க யாரு...?''

மறுமுனையில் குரல் சிரித்தது. ''ஓ! ரிஸீவரை நீங்க எடுத்துக்கிட்டீங்களா இன்ஸ்பெக்டர்...? பரவாயில்லை. உங்ககிட்டயே விஷயத்தைச் சொல்லிடறேன். கொஞ்ச நேரத்துக்கு முந்தி விஜேஷைக் கொலை பண்ண வந்தது நான்தான். நான் கொஞ்சம் அதிகப்படியான துணிச்சலோடு இருக்கப்போய் ஏமாந்துட்டேன். விஜேஷ் இன்னிக்கு என்கிட்டயிருந்து தப்பிச்சிருக்கலாம், ஆனா அடுத்த தடவை தப்ப முடியாது. கூடிய சீக்கிரம் எல்லா பேப்பர்களிலேயும் 'பிரபல சினிமா டைரக்டர் விஜேஷ் கோரக் கொலை' என்கிற தலைப்புல செய்தி வரும்...''

''டேய்... யார்ரா... நீ....?''

''போன் நெம்பர் தர்றேன். நோட் பண்ணிக்குங்க இன்ஸ்பெக்டர்... ஜீரோ... ஜீரோ... ஜீரோ... ஜீரோ... ஜீரோ... என்கிட்ட பேசணும்ன்னா இந்த நெம்பர்க்கு போன் பண்ணுங்க. இல்லேன்னா டெலிபோன் எக்ச்சேஞ்சில் இந்த நெம்பர்க்குரிய அட்ரஸ் கேளுங்க... அவங்க சொல்லுவாங்க''

''என்ன கிண்டலா...? விஜேஷ் மேல உனக்கு என்ன

கோபம்...? அவரை எதுக்காகக் கொலைபண்ணனும்ன்னு நினைக்கிறே....?''

''கொலை பண்ணிட்டு சொல்றேனே!'' - மறுமுனையில் ரிஸீவர் ஒரு கேலி சிரிப்புச் சத்தத்தோடு கவிழ்ந்து கொள்ளும் சத்தம் கேட்டது.

## 8

டாக்டர் சீனிவாசராகவன் இரவு நேரச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு டி.வி.யில் ஸ்டார் நியூஸ் சேனலைத் தேடிக் கொண்டிருந்தபோது வாசலில் அழைப்பு மணிச் சத்தம் கேட்டது.

போய்க் கதவைத் திறந்தார்.

வெளியே-

ஸிம்ஹாவும் ராஜீவும் புன்னகையோடு நின்றிருந்தார்கள்.

டாக்டர் முகம் மாறினார்.

''நீ...நீங்களா...?''

''ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ் டாக்டர்...! உங்ககிட்ட ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும். முடியுமா...?'' ஸிம்ஹா கேட்டாள்.

''காலையில் பாடின அதே பல்லவிதானே...?''

''இல்ல டாக்டர்...! இது புது பல்லவி...''

''புது பல்லவியா...?''

''ஆமா...''

''என்ன? சொல்லு...!''

''உள்ளே போய் உட்கார்ந்து பேசறதுல உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே...?''

''வா...''

வேண்டா வெறுப்பாய் உள்ளே கூட்டிக்கொண்டு போனார் டாக்டர். சோபாக்களைக் காட்டிவிட்டு பிரம்பு நாற்காலிக்கு சாய்ந்து கொண்டே கேட்டார்.

''சொல்லு... ஸிம்ஹா...''

''நாளைக்குக் காலையில ஒரு ஆறு மணி சுமார்க்கு உங்க ஹாஸ்பிட்டலுக்கு முன்னாடி சின்னதா பந்தல் போட்டுக்க அனுமதி வேணும்...''



''எதுக்கு...?''

''போராட்டம் நடத்தத்தான்...''

''போராட்டமா...? என்ன போராட்டம்?''

''உண்மையை வெளியே கொண்டுவர்ற போராட்டம். அதாவது உங்ககிட்டயிருந்து உண்மை வெளியே வரணும்.''

''என்ன உண்மை...?''

''தயாநிதி கொலை செய்யப்பட்டார்ங்கிற உண்மை''

''நான்தான் ஏற்கெனவே சொல்லிட்டேனே. தயாநிதி இறந்தது இயற்கையான மரணம்ன்னு...''

ராஜீவ் குறுக்கிட்டான். ''டாக்டர்...! இன்னிக்குக் காலையில் உங்களைப் பார்த்து பேசிட்டு வர்றப்ப கார் சாவியை மறந்துட்டோம். அந்த சாவியை எடுக்கிறதுக்காக நான் மறுபடியும் உங்க ரூமை நோக்கி வந்தபோது நீங்க டெலிபோன்ல யார் கூடவோ பேசிட்டிருந்ததை நான் கேட்டுட்டேன்...''

இப்போது சீனிவாசராகவனின் முகம் கலவரப் பகுதியாய் மாறிக் கொண்டிருக்க, ஸிம்ஹா தொடர்ந்தாள்.

''டாக்டர்...! உலகத்திலேயே ரெண்டே ரெண்டு தொழில்தான் 'நோபிள் ப்ரொஃபஷன்ஸ்' என்கிற பேரை வாங்கியிருக்கு. ஒண்ணு டீச்சர் தொழில். இன்னொன்று டாக்டர் தொழில்... உண்மையும் உழைப்பும் இந்த ரெண்டு தொழிலுக்கும் ரெண்டு கண்களை மாதிரி.''

ஸிம்ஹா புன்னகையோடு சீனிவாசராகவனை ஏறிட்டாள்.

''டாக்டர்...! இனிமே நீங்க தப்ப முடியாது! டெலிபோன்ல நீங்க பேசினதை ராஜீவ் அட்சர சுத்தமா கேட்டுட்டார். அதை மறுக்க உங்களால முடியாது. அப்படி ஒரு வேளை நீங்க மறுத்தா நாங்க அறவழியில் போராட வேண்டியிருக்கும். அப்படி போராடும்போது உங்க பேர் கெடும். ஹாஸ்பிட்டல் பேர் கெடும். பேப்பர்களும் டி.வி.யும் உங்களைத் திரும்பிப் பார்க்கும். அதுக்கப்புறம் எதிர்க்கட்சிகள் சும்மாயிருக்காது. உங்க விவகாரத்தை பெரிசு பண்ணி...''

டாக்டர் கையமர்த்தினார்.

''நிலைமை எனக்கு புரியுது...''

"அப்படீன்னா... உண்மையைச் சொல்லுங்க. மத்த பிரச்னைகளை நாங்க பார்த்துக்கறோம்."

டாக்டர் சில விநாடிகள் தயங்கிவிட்டு பின் தொடர்ந்தார்.

"தயாநிதியோட மரணத்தை மேலோட்டமா பார்த்தா ஹார்ட் அட்டாக் மாதிரி தெரியும். ஆனா அவர் விஷம் கொடுத்து கொல்லப்பட்டிருக்கார்."

"விஷமா,..? எப்படி...?"

"அவர் சாப்பிடற விஸ்கி பாட்டிலில் அது கலக்கப் பட்டிருந்தது. புது விஸ்கி பாட்டிலின் மூடியின் வழியா யாரோ பாய்ஸன் இஞ்செக்ஷனை செலுத்தியிருக்காங்க... அந்த பாட்டிலை நான்தான் மொதல்ல பார்த்து போலீஸ் கமிஷனர்கிட்ட சொன்னேன். இந்த விஷயத்தை வெளியே சொல்ல வேண்டாம்ன்னு அவர் என்கிட்ட சொல்லிட்டார்."

"நீங்க காரணம் கேட்கலையா...?"

"கேட்டேன்! அதுக்கு அவர் 'இது பெரிய இடத்து விவகாரம். உண்மைகளை சொல்லக்கூடாதுன்னு எனக்கு வாய்ப்பூட்டு போட்டிருக்காங்க. நீங்களும் ஒரு பூட்டை எடுத்து மாட்டிக்கிறது நல்லது. நீங்க டெத் சர்ட்டிஃபிகேட் கொடுக்கும்போது தயாநிதியோட மரணம் இயற்கையான முறையில் மாரடைப்பால் ஏற்பட்டதுன்னு கொடுத்துடறது உங்களுக்கு நல்லது. இல்லேன்னா நீங்க வீண் பிரச்னைகளை சந்திக்க வேண்டியிருக்கும்'ன்னு சொன்னார்."

"இதை யார் சொன்னது...?"

"கமிஷனர்...!"

"அப்படீன்னா கொலையாளி யார்ன்னு கமிஷனர்க்கு நல்லாவே தெரியும்...?"

"அதைப்பத்தி எனக்குத் தெரியாது. இந்தக் கேள்வியை நீங்க அவர்கிட்டதான் கேட்கணும்."

## 9

டெலிபோன் முதல் தடவை கூப்பிட்டதுமே பக்கத்தில் இருந்த விஜேஷ் ரிஸீவரை எடுத்தான்.



மறுமுனையில் சார்லஸ் பேசினார்.

"விஜேஷ்...! உங்களைக் கொலை பண்ண முயற்சி செஞ்சவன் பழைய குற்றவாளி கிடையாது. உங்க வீட்டிலிருந்து எடுத்த கைரேகைப் பதிவுகள் எதுவுமே பழைய குற்றவாளிகளின் கைரேகைகளோடு ஒத்துப் போகலை... இவன் புதிய ஆள். உங்க மேல அவனுக்கு என்ன கோபம்ன்னு தெரிஞ்சாத்தான் அவன் யார்ங் கிறதைக் கண்டுபிடிக்க முடியும்..."

"எவ்வளவு யோசனை பண்ணியும் எனக்கு எந்தக் காரணமும் தோணலை சார்லஸ்... சினிமா ஃபீல்டுல என்னோட வளர்ச்சியைப் பொறுக்கமாட்டாதவங்க யாரோ என்னைத் தீர்த்துக்கட்ட முயற்சி பண்றாங்கன்னு நினைக்கிறேன்..."

"அப்படியிருக்க வாய்ப்பில்லை விஜேஷ்..."

"எப்படி சொல்றீங்க...?"

"அப்படிப்பட்ட எண்ணத்துல அவன் வந்திருந்தா உடனே உங்களைத் தீர்த்துக்கட்டிட்டு போயிருப்பான். சாவகாசமா கதை பேசிக்கிட்டு உட்கார்ந்திருக்கமாட் டான். உங்களால அவன் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறான். இல்லேன்னா இப்படி ஒரு கொலை வெறி அவனுக்குள்ளே இருக்காது. கொஞ்சம் நிதானமா உட்கார்ந்து யோசனை பண்ணுங்க. ஃப்ளாஷ் பேக்கை மனசுக்குள்ளே ஓட்டிப்பாருங்க. அதே மாதிரி உங்க மரணத்தால யார்க்கு லாபம், யார்க்கு சந்தோ ஷம்ங்கிறதையும் 'திங்க்' பண்ணிப்பாருங்க."

"ரெண்டு நாளா எனக்கு இதே யோசனைதான் சார்லஸ்... நான்; மனதார யார்க்கும் துரோகம் பண்ணியது கிடையாது..."

"எனக்கு உங்களைப் பத்தி தெரியும். டோண்ட் வொரி. உங்களைக் கொலை செய்ய வந்தவனைக் கண்டுபிடிக்க ஒரு போலீஸ் ஸ்க்வாட் மும்முரமா இயங்கிட்டிருக்கு. நாலா பக்கமும் வலை விரிச்சு வெச்சிருக்கோம். எப்படியும் மாட்டிக்குவான். நீங்க மட்டும் ஒரு வார காலத்துக்கு வீட்டைவிட்டு வெளியே வராமே பத்திரமா இருந்தா போதும். முன்னே பின்னே தெரியாதவங்க யாரையும் மீட் பண்ற எந்த முயற்சியும் வேண்டாம்.... உங்களுக்கு

போலீஸ் பாதுகாப்பு போட்டிருக்கு. அவங்க பேச்சை மீறி நீங்க எதுவுமே செய்யக்கூடாது."

"சரி..." விஜேஷ் பேசிவிட்டு ரிஸீவரை வைத்தான். மனசுக்குள் ஒரு பயம் உருண்டு கொண்டே இருந்தது.

'போலீஸ் அவனைப் பிடித்துவிடுவார்களா? இல்லை போலீஸ் பிடிப்பதற்குமுன் அவன் என்னை முடித்து விடுவானா?'

யோசனையாய் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்ட விஜேஷ் குழப்பமான யோசனைகளால் ஆழ்ந்து புகைவிட்ட விநாடி-

இண்டர்காம் முணுமுணுத்தது.

விஜேஷ் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுக்க, பங்களாவுக்கு முன்பாய் இருந்த செக்யூரிட்டி ஆபீஸர் பேசினார்.

"ஸார்...! உங்களைப் பார்க்கிறதுக்காக உங்க ஃப்ரண்ட் ஒருத்தர் வந்திருக்கார்..."

"பேரு...?"

"ஹேமச்சந்திரன்...! வீடியோ மானிட்டர்ல அவரை உங்களுக்கு காட்றோம். பார்த்துட்டு நீங்க ஓ.கே. சொன்னா அவரை உள்ளே அனுப்பி வைக்கிறோம்."

தனக்கு முன்னால் இருந்த மானிட்டரை 'ஆன்' செய்தான் விஜேஷ். திரையில் ஹேமச்சந்திரனின் உருவம் தெரிந்தது.

"எஸ்...! என்னோட ஃப்ரண்ட்தான். மேலே அனுப்புங்க..."

மானிட்டரை அணைத்துவிட்டு சிகரெட் புகையோடு விஜேஷ் காத்திருக்க - இரண்டு நிமிஷம் கழித்து ஹேமச்சந்திரன் உள்ளே வந்தான்.

"வாடா... எப்ப ஃபாரின்லயிருந்து வந்தே?"

"டேய்... விஜேஷ்...! நான் ஃபாரின்லயிருந்து வந்தது இருக்கட்டும். பேப்பர்ல நான் பார்த்த நியூஸ் உண்மைதானா...? உன்னைக் கொலை பண்ண முயற்சி நடந்ததா?"

விஜேஷ் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் இட்டு தேய்த்துவிட்டு நிமிர்ந்தான்.

"ஆமா..."



"யார்ரா அவன்...?"

"யார்க்குத் தெரியும்? ஒருத்தனுக்கு பேரும் புகழும் வந்தாலே எதிரிகள் உருவாவதை தடுக்க முடியாதுன்னு சொல்வாங்க."

"பேப்பர்ல நியூஸ் பார்த்ததும் எனக்கு பயங்கர ஷாக். போன்ல ட்ரை பண்ணினேன். என்கேஜ்டாவே இருந்தது. காத்திருக்க பொறுமையில்லாமே நேர்லேயே வந்துட்டேன். இங்கே வந்து பார்த்தா செக்யூரிட்டி கெடுபிடி. போலீஸ் அந்த நபரை ட்ரேஸ் பண்ணிட்டாங்களா இல்லையா...?"

"ஒரு ஸ்க்வாட் முயற்சி பண்ணிட்டிருக்காங்க...! அது இருக்கட்டும். நீ எப்போ ஃபாரின்லயிருந்து ரிட்டர்ன் ஆனே?"

"நேத்து..."

"ட்ரெய்னிங் கோர்ஸை ஒழுங்கா முடிச்சியா?"

"ம்...! வெரியூஸ்ஃபுல். நாளைக்கு கம்பெனியில் போய் ஜாய்ன் பண்ணணும்" சொன்ன ஹேமச்சந்திரன் மறுபடியும் விஜேஷ் விஷயத்துக்கே வந்தான்.

"யார்ரா அவன்... உன்னைக் கொலை பண்ண வந்தவன்...? கொஞ்சம் அடையாளம் சொல்லு. எனக்கு ஏதாவது பிடிபடுதான்னு பார்க்கிறேன்..."

விஜேஷ் வந்தவனின் அடையாளம் சொன்னான். சொல்லிக் கொண்டிருக்கும்போதே டெலிபோன் மறுபடியும் கூப்பிட்டது.

விஜேஷ் ரிஸீவரை எடுக்க மறுமுனையில் சார்லஸ் குரல் கொடுத்தார்.

"விஜேஷ்...! நீங்க உடனடியா செக்யூரிட்டி போலீஸ் பாதுகாப்போடு ஜி.ஹெச்சுக்கு புறப்பட்டு வாங்க"

"ஜி.ஹெச்சுக்கா...? எதுக்கு...?"

"வாங்க...! சொல்றேன்..."

# 10

போலீஸ் கமிஷனர் அலுவலகம்.

கமிஷனர் சக்கரபாணிக்கு முன்பாக கோப முகங்களோடு நின்றிருந்தார்கள் ஸிம்ஹாவும் ராஜீவும்.

ஸிம்ஹா கேட்டாள்.

"அப்படீன்னா தயாநிதிக்கு விஷம் கொடுத்து கொலை பண்ணினது யார்ன்னு உங்களுக்குத் தெரியாது?"

"தெரியாது. மேலிடத்திலிருந்து எனக்கு ஒரு கட்டளை வந்தது. அந்த கட்டளைப்படி டாக்டர் சீனிவாசராகவன்கிட்டேயும் பாடியை போஸ்ட் மார்ட்டம் செய்த ஜி.ஹெச். டாக்டர்கிட்டேயும் தயாநிதியோட மரணம் இயற்கையானதுன்னு ரிப்போர்ட் வாங்கினேன்"

"இது யாரைக் காப்பாத்த...?"

"தெரியாது..."

"மேலிடக் கட்டளைன்னு சொன்னீங்களே... யார் அந்த மேலிடம்...?"

"தெரியாது..."

"உங்களுக்குத் தெரியும். ஆனா சொல்ல பயம்"

"அப்படியும் வெச்சுக்கலாம்..."

"இப்படி சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லை? நீங்க ஒரு போலீஸ் கமிஷனர். கள்ளச்சாராயம் காய்ச்சுகிற வியாபாரி கிடையாது."

சக்கரபாணி வெறுமையாய்ப் புன்னகைத்தார்.

"மேலிடக் கட்டளைகள் எனக்கு பழகிப்போன ஒண்ணு. இது மாதிரியான கட்டளைகளை நான் நிறை வேற்றியிருக்கேன். இப்படிப்பட்ட நிழல் காரியங்கள் எல்லா ஆட்சியிலேயும் இருக்கும். இதை அவாய்ட் பண்ண முடியாது. இப்ப உங்ககிட்ட உண்மையைச் சொல்லிட் டிருக்கேன். இதையே பத்திரிக்கைக்காரங்க கேட்டா பொய்தான் சொல்லுவேன்."

ராஜீவ் கோபமாய்க் குறுக்கிட்டான்.

"தயாநிதியை விஷம் கொடுத்துக் கொலை பண்ணின கொலையாளியை நாங்க கண்டுபிடிச்சு உங்க முன்னாடி கொண்டு வந்து நிறுத்தினா நீங்க கைது பண்ணுவீங் களா...?"

"நீங்க கொலையாளியைக் கண்டுபிடிக்கப் போறிங்களா...?"

"ஆமா..."

"எப்படி...?"

"எப்படியோ..."



"இது வீண் வேலை. உங்களால முடியாது. தயாநிதி விவகாரத்தை இதோடு விட்டுட்டு வேற வேலை இருந்தா போய்ப் பாருங்க..."

"ஸாரி கமிஷனர் ஸார்... இனிமே எங்களுக்கு இதுதான் வேலை. கொலையாளியை எப்படிக் கண்டுபிடிக் கிறதுன்னு எங்களுக்கு நல்லாவே தெரியும். கொலையாளி யைக் கண்டுபிடிச்சுட்டு சீக்கிரமே உங்களை வந்து பார்ப்போம்."

கமிஷனர் தோள்களைக் குலுக்கி ஒரு கேலிச் சிரிப்பு சிரித்துவிட்டு சொன்னார்.

"பெஸ்ட் ஆஃப் லக்... போய்ட்டு வாங்க"

# 11

விஜேஷ் ரிஸீவரை வைத்துவிட்டு ஹேமச்சந் திரனைப் பார்க்க, அவன் கேட்டான்.

"என்ன விஜேஷ்...?"

"இன்ஸ்பெக்டர் சார்லஸ் என்னை உடனடியா போலீஸ் பாதுகாப்போடு ஜி.ஹெச்சுக்கு வரச் சொல்றார்."

"எதுக்கு...?"

"தெரியலை..."

"அவர் காரணம் இல்லாமே வரச் சொல்லியிருக்க மாட்டார். கிளம்பு... நானும் உன்கூட வர்றேன்..."

போலீஸ் செக்யூரிட்டிக்கு விஷயத்தைச் சொல்லி அவர்கள் பாதுகாப்போடு காரில் இருவரும் ஜி.ஹெச். புறப்பட்டார்கள்.

பதினைந்து நிமிஷத்தில் ஜி.ஹெச் வர- வராந்தாவின் ஆரம்பத்திலேயே சார்லஸ் கிடைத்தார்.

"வாங்க... விஜேஷ்...!"

"என்ன சார்லஸ்...! எதுக்காக என்னை ஜி.ஹெச் வரச் சொன்னீங்க...?"

"விஷயம் இருக்கு... உள்ளே வாங்க..."

மூன்று பேரும் வராந்தாவில் நடந்தார்கள். நடக்க நடக்க சார்லஸ் ஹேமச்சந்திரனைப் பார்த்துவிட்டு விஜேஷிடம் கேட்டார்.

"இவர்... யார்ன்னு சொல்லலையே?"

''இவர் ஹேமச்சந்திரன்... என்னோட க்ளோஸ் ஃப்ரண்ட். ஒரு ட்ரய்னிங் கோர்ஸை முடிக்கிறதுக்காக ஃபாரின் போய்ட்டு நேத்திக்குத்தான் திரும்பியிருக்கார். பேப்பர்ல என்னைப் பத்தின நியூஸைப் பார்த்ததும் உடனே என்னைப் பார்க்க வந்துட்டார்''

சாலஸ்-ம் ஹேமச்சந்திரனும் பரஸ்பரம் பார்த்து ''ஹலோ'' சொல்லிக்கொண்டார்கள்.

மூன்று பேரும் ஹாஸ்பிட்டலின் பிரதான வார்டுகளைச் சுற்றிக் கொண்டு அந்த வராந்தாவின் கோடியில் இருந்த மார்ச்சுவரிக்கு முன்பாய் நின்றார்கள்.

விஜேஷ் கலவரமானான்.

''என்ன சார்லஸ்...! இங்கே...?''

''உள்ளே வாங்க... விஷயம்... புரியும்...''

மார்ச்சுவரியின் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள்.

ஒரு பெரிய தகர டேபிளுக்கு முன்பாய் போய் நின்றார் சார்லஸ்.

''விஜேஷ்...! உங்களைக் கொலை செய்ய வந்தவன் இவனான்னு பாருங்க....'' சொன்ன சார்லஸ் தகர டேபிளை நெருங்கி ஒரு உடலின் மேல் போர்த்தப்பட்டிருந்த வெள்ளை விரிப்பை இழுத்தார்.

அந்த உடல் பார்வைக்குக் கிடைத்தது. ரத்தத்தில் தோய்ந்த உடல். பைஜாமா உடை. முகம் பார்மலினால் கழுவப்பட்டு பளிச்சென்று தெரிய, விஜேஷ் பார்வையை உன்னிப்பாக்கிக்கொண்டு உற்றுப் பார்த்தான். பின் தீர்க்கமான குரலில் சொன்னான்.

''இவன்தான்... சார்லஸ்...''

''சந்தேகம் இல்லையே...?''

''நோ டவுட்... இவனேதான்...!''

''ஒரு மணி நேரத்துக்கு முந்தி ஒரு ரோடு ஆக்ஸி டெண்ட்டில் அடிபட்டு ஸ்பாட்லேயே மரணம். எனக்குத் தகவல் கிடைத்து வந்து பார்த்தபோது, நேத்திக்கு நீங்க சொன்ன அடையாளங்களோடு இவனோட அடையா ளங்கள் ஒத்துப் போயிருந்தது. அதான் உங்களை வரச் சொன்னேன்.''

''இவன் யார்ன்னு தெரிஞ்சுதா ?''



''தெரியலை... பாக்கெட்ல ஒரு சின்னப்ளாஸ்டிக் கவர் மட்டும் இருந்தது. அந்த கவர்க்குள்ளே சினிமா நடிகை ரூப்கலாவோட போட்டோ கையெழுத்தோடு இருந்தது. அதைத்தவிர வேறு எந்தப் பொருளும் இவன்கிட்ட இல்லை... இனிமேல்தான் இவன் யார்ங்கிறதைக் கண்டுபிடிக்கணும்...''

# 12

''அக்கா...!''

ஸிம்ஹா கூப்பிட கண்ணீரோடு கட்டிலில் ஒருக்களித்துப் படுத்து இருந்த ஷர்மிலி கண்களைத் துடைத்தபடி எழுந்து உட்கார்ந்தாள்.

ராஜீவும் ஸிம்ஹாவும் உள்ளே வந்தார்கள்.

ராஜீவ் ஒரு நாற்காலிக்குப் போய் சாய்ந்து கொள்ள, ஸிம்ஹா ஷர்மிலிக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

''அக்கா...! அத்தான் இயற்கையா சாகலை. அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம்ன்னு ராஜீவ் சொன்னது உண்மையாயிடுச்சு...''

ஷர்மிலியின் விழிகள் வியப்புக்கு போயின.

''கொலையா...?''

''ம்...''

''எப்படி கண்டுபிடிச்சீங்க...?''

''நம்ம டாக்டரும் ஒத்துக்கிட்டாரு. கமிஷனரும் ஒத்துக்கிட்டாரு. மேலிட கட்டளைப்படி அத்தான் கொலை செய்யப்பட்டதை இயற்கை மரணமா மாத்திட்டாங்க. கமிஷனர் சொன்னபடி டாக்டர் ரிப்போர்ட் கொடுத்து இருக்கார்...''

ஷர்மிலியின் கண்களில் இப்போது புதிதாய் நீர் சுரந்து கன்னங்களில் இரண்டு வாய்க்கால்களாக மாறியது.

''அவரை யார் கொலை பண்ணினாங்க...? எதுக்காக கொலை பண்ணினாங்க...?''

''அதை நாமதான் இனி கண்டுபிடிக்கணும்...! இந்த விஷயத்துல போலீஸோட உதவி நமக்குக் கிடைக்காது. நாமதான் கொலையை ஸ்மெல் பண்ணி அந்தத் திசையைப் பார்த்து நடக்கணும்... அதுக்கு உன்னோட

உதவி வேணும்..."

ஷர்மிலி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கோபமாய் நிமிர்ந்தாள்.

"நான் என்ன பண்ணணும்...? சொல்லு ஸிம்ஹா. உன் அத்தானோட மரணத்துக்குக் காரணமானவங்க யாராயிருந்தாலும் சரி... அவங்களை என் கையால நானே பழி வாங்குவேன். சட்டம் அவங்களை விட்டாலும் நான் விடமாட்டேன்..."

"அக்கா...! அத்தான் கொலை செய்யப்பட்டது எப்படி தெரியுமா...? அவர் சாப்பிட்ட விஸ்கியில் யாரோ பாட்டிலின் மேல் மூடி வழியா ஊசி மூலமா விஷத்தை இஞ்செக்ட் பண்ணியிருக்காங்க... அதாவது ஒப்பன் பண்ணாத புது பாட்டிலில்."

"அதெப்படி முடியும்...?"

"ஏன் முடியாது...? இந்த வீட்டுக்குள்ளே நுழைஞ்ச யாரோ ஒருத்தர் அத்தான் ரூமுக்குப் போய் அவர் அலமாரியில் வெச்சிருக்கிற விஸ்கி பாட்டிலை எடுத்து இஞ்செக்ட் பண்றது கஷ்டமான காரியமா என்ன...?"

"நான் வீட்ல இருக்கும்போது அதெப்படி சாத்தியம்...?"

ராஜீவ் குறுக்கிட்டான். "நீங்க வீட்டை பூட்டிக்கிட்டு வெளியே போயிருக்கும்போது யாராவது வீட்டுப் பின்பக்கமா ஏறி உள்ளே குதிச்சு அந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கலாமே...?"

ஸிம்ஹா தொடர்ந்தாள். "அக்கா...! போலீஸ் கமிஷனர் நேரடியாவே அத்தானோட மரணத்தை டீல் பண்ணி கொலையாளியைக் காப்பாற்ற முயற்சி எடுத்திருக்கார். ஸோ... இதிலிருந்து கொலையாளி ஒரு அதிமுக்கியமான வி.ஐ.பி.யா இருக்கலாம்ன்னு எம் மனசுக்குப் படுது. அத்தானுக்கு ரொம்பவும் பழக்கமான வி.ஐ.பீஸ் யார் யார்ன்னு உனக்குத் தெரியுமா...?"

"அப்படி யாரும் இருக்கிற மாதிரி எனக்குத் தெரியலையே... கடந்த ஒரு வருஷ காலமாவே அவர் பார்த்துக்கிட்டிருந்த ரியல் எஸ்டேட் பிசினஸில் அவர்க்கு ஏகப்பட்ட லாஸ். வேற தொழில் பார்க்கணும்ன்னு சொல்லிட்டிருந்தார்."

"வேற தொழில்ன்னா என்ன தொழில்?"



"சினிமா லைனுக்கு போலாமான்னு யோசனை பண்ணிட்டிருந்தார்."

"அதுக்காக அவர் யாரையாவது போய்ப் பார்த்தாரா...?"

"இல்லை..."

"வேற யாராவது இவரை தேடிட்டு வந்தாங்களா?"

"இல்லை..."

"உன் மனசுக்கு சந்தேகம் தட்டும்படியா வெளியே இருந்து யாராவது போன் பண்ணியது உண்டா...?"

ஷர்மிலி யோசிக்க முழுதாய் ஒரு நிமிஷம் எடுத்துக் கொண்டபின்- ஸிம்ஹாவை ஏறிட்டாள்.

"நாலு மாசத்துக்கு முந்தி ஒரு நாள் ராத்திரி பத்து மணியிருக்கும். உன்னோட அத்தான் ஏதோ வேலை விஷயமா விஜயவாடா வரைக்கும் போயிருந்தார். பத்து மணியிலிருந்து ராத்திரி பனிரெண்டு மணி வரைக்கும் ஒரு போன் கால் வந்துட்டேயிருந்தது. நான் எடுத்து 'ஹலோ'ன்னு குரல் கொடுத்ததுமே மறுபக்கம் ரிஸீவரை வெச்சுடுவாங்க. கடைசியில் பனிரெண்டு மணி சுமார்க்கு போனை அட்டெண்ட் பண்ணின போது ரிஸீவரில் ஒரு ஆண் குரல் கேட்டது. அத்தானைக் கேட்டாங்க. நான் இல்லைன்னு சொன்னேன். எங்கே போயிருக்கார்ன்னு கேட்டாங்க. நான் விஜயவாடான்னு சொன்னதும் எப்ப வருவாங்கன்னு கேட்டாங்க. ரெண்டு நாளாகும்ன்னு சொன்னேன். விஜயவாடாவிலிருந்து போன் பண்ணுவாரான்னு கேட்டாங்க. பண்ணுவார்ன்னு சொன்னேன். அப்படி அவர் போன் பண்ணினா மெட்ராஸில் இருக்கிற இந்த போன் நெம்பரை உடனடியா காண்ட்டாக்ட் பண்ணச் சொல்லுங்கன்னு சொல்லிட்டு ஒரு போன் நெம்பரைக் கொடுத்தாங்க..."

ராஜீவ் பதற்றமாய்க் குறுக்கிட்டான்.

"அந்த போன் நெம்பர் என்னான்னு தெரியுமா...? எங்கேயாவது குறிச்சு வெச்சீங்களா...?"

"அந்த போன் நெம்பரை அவங்க சொல்லச் சொல்ல அப்படியே பை ஹார்ட் பண்ணிட்டேன். அது ஈஸியா மெமரி பண்ணிக்கிற நெம்பர் 4545454..."

"இந்த நெம்பர் யாரோடது...?"

"தெரியலை..."





"விஜயவாடாவிலிருந்து உங்ககணவர் போன்பண்ணி உங்ககிட்ட பேசும்போது இந்த நெம்பரைச் சொன்னீங்களா...?"

"சொன்னேன்..."

ராஜீவ் ஸிம்ஹாவிடம் திரும்பினான்.

"ஸிம்ஹா...! இந்த நெம்பர்க்கு போன் பண்ணி பார்க்கலாமா...?"

"ம்... டயல் பண்ணுங்க... களத்துல குதிச்சுட்டோம். ரெண்டுல ஒன்னைப் பார்த்துடுவோம்..."

ராஜீவ் பக்கத்தில் இருந்த டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களைத் தீட்டினான்.

மறுமுனையில் ரிங் போவதற்குப் பதிலாக எக்சேஞ்சில் பதிவு செய்யப்பட்ட ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

"நீங்கள் டயல் செய்த எண் தற்போது உபயோகத்தில் இல்லை..."

ராஜீவ் இணைப்பைத் துண்டித்துவிட்டு விபரம் சொல்ல- ஸிம்ஹா சில விநாடிகள் யோசித்துவிட்டு சொன்னாள்.

"டெலிபோன் எக்சேஞ்சில் என் ஃப்ரண்ட் ஒருத்தி இருக்கா. அவளை காண்ட்டாக்ட் பண்ணி இந்த நெம்பர் நாலு மாசத்துக்கு முந்தி யார் பேர்ல இருந்ததுங்கிறதைக் கண்டுபிடிச்சுடலாம்..."

சொன்ன ஸிம்ஹா தி.நகர் டெலிபோன் எக்சேஞ்சுக்கு போன் செய்து "குணசுந்தரி ப்ளீஸ்..." என்றாள்.

அந்த குணசுந்தரி உடனே கிடைத்தாள்.

"குணா...! நான் ஸிம்ஹா..."

"ஏய் ஸிம்ஹா! நிஜமா... நீயா...? எப்ப மெட்ராஸ் மண்ணை மிதிச்சே...?"

"ரெண்டு நாளாச்சு..."

"என்னோட ஞாபகம் கூட உனக்கு இருக்கா?"

"இல்லாமலா போன் பண்ணியிருக்கேன்?"

"இந்தக் கதைதானே வேண்டாம்ங்கிறது. சோழியன் குடுமி சும்மா ஆடாது. நீ காரணமில்லாமே எனக்கு போன் பண்ணமாட்டியே..."

"ஒரு சின்ன ஹெல்ப்..."

''அப்படி வா வழிக்கு... சொல்லு... என்ன உதவி வேணும்...?''

''ஒருடெலிபோன்நெம்பர்4545454.நாலுமாசத்துக்கு முந்தி உபயோகத்தில் இருந்த இந்த நெம்பர் இப்போ உபயோகத்தில் இல்லை. இந்த நெம்பர் யாரோடதுன்னு சொல்லமுடியுமா?''

''சொல்ல முடியுமே...! ஒரு நிமிஷம் லைன்ல இருக்கியா...?''

''ம்... டேக் யுவர் வோன் டைம்''

இரண்டு நிமிஷ நேரத்திற்குப் பிறகு குணசுந்தரியின் குரல் கேட்டது.

''ஸிம்ஹா.. அந்த நெம்பர்...''

''சொல்லு...''

''பிரபல சினிமா டைரக்டர் விஜேஷோட பழைய போன் நெம்பர் அது...''

## 13

ஆழ்வார்பேட்டையின் பிரதான தெருவில் இருந்த அந்த சிறிய காம்ப்ளெக்ஸுக்கு முன்னால் போலீஸ் ஜீப் நின்றது.

சார்லஸ் இறங்கிக்கொண்டே அங்கே நின்று கொண்டிருந்த காம்ப்ளக்ஸ் செக்யூரிட்டியிடம் கேட்டார்.

''வெல் வாஷ் டிரை கிளீனர்ஸ் எந்த மாடியில் இருக்கு...?''

''ரெண்டாவது மாடி ஸார்...''

சார்லஸ் பக்கவாட்டில் வளைந்து போன மாடிப்படிகளில் ஏறி இரண்டாவது மாடிக்குப் போனார். வெல் வாஷ் ட்ரை க்ளீனர்ஸ் கடை கொஞ்சம் கஸ்டமர்கள் கூட்டத்தோடு தெரிந்தது. துணிகளை வாங்கி சரிபார்த்து பில் போட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்ணை நெருங்கினார் சார்லஸ்.

''கடை ஓனர் யாரம்மா...?''

''உள்ளே இருக்கார் ஸார்...'' காக்கி யூனிஃபார்மைப் பார்த்து மிரண்டு கொண்டே அந்தப் பெண் பதில் சொல்ல, சார்லஸ் உள்ளே போய் கேஷ் எண்ணிக் கொண்டிருந்த



தலை நரைத்த ஐம்பது வயது நபரை சந்தித்தார்.

''எக்ஸ்யூஸ்மீ...''

அவர் குழப்பமாய் நிமிர்ந்தார்.

''எஸ்...''

''ஒரு என்கொய்ரி...''

''ப்ளீஸ் உட்காருங்க...''

சார்லஸ் உட்கார்ந்ததும் கேட்டார்.

''சொல்லுங்க.... என்ன என்கொய்ரி?''

சார்லஸ் கையோடு கொண்டு போயிருந்த ஒரு சிறிய பாலிதீன் கவரைப் பிரித்து உள்ளே இருந்த ஒரு சிறிய துணி லேபிளை எடுத்துக் கொடுத்தார்.

''இந்த துணி லேபிளில் W.W.D. ன்னு எழுதி ஒரு நெம்பரும் போட்டிருக்கு. இது உங்க கடையோட லேபிள்தானே...?''

அவர் வாங்கிப் பார்த்துவிட்டு மெல்ல தலையாட்டினார்.

''ஆமா...! இது எங்க கடையோட லேபிள்தான். வெல் வாஷ் ட்ரை க்ளீனர்ஸ் பேரோட சுருக்கம்தான் இந்த W.W.D...''

''இந்த நெம்பர் எதைக் குறிக்குது...?''

''துணிகளை ட்ரை வாஷுக்கு போடும்போது டெலிவரி டேட்டைப் போட்டு ஒரு பில் கொடுப்போம். அந்த பில்லோட நெம்பர்தான் இது...''

''அப்படீன்னா இந்த நெம்பரை வெச்சுக்கிட்டு கஸ்டமர் யார்ங்கிறதை கண்டுபிடிச்சுடலாம் இல்லையா...?''

''கண்டிப்பா...''

''உங்க பேர் என்ன...?''

''சபாபதி...''

''மிஸ்டர் சபாபதி...! இந்த லேபிள் ரோடு ஆக்ஸிடெண்டில் இறந்துபோன ஒரு நபரின் பைஜாமா உட்பகுதியில் ஸ்டேப்ளரால் 'பின்' செய்யப்பட்டிருந்தது. ஆள் யார்ன்னு கண்டுபிடிக்கமுடியலை. உடைகளை செக் பண்ணும்போது இந்த லேபிள்தான் கிடைச்சது. இதை சலவைத் தொழிலாளர்கள் சங்கத்துல காட்டி விபரம் கேட்டபோது உங்க கடையோட பேரைச் சொன்னாங்க.

அதான் என்கொய்ரி பண்ணிட்டு போலாம்ன்னு வந்தேன்.''

''இந்த லேபிளுக்குரிய நபர் யார்ன்னு உங்களுக்குத் தெரியணும். அவ்வளவுதானே...?''

''ஆமா...''

''வில் யூ ப்ளீஸ் வெயிட் ஃபார் ஃபைவ் மினிட்ஸ்...?''

''பை ஆல் மீன்ஸ்...''

சபாபதி வெளியே தலையை நீட்டி குரல் கொடுத்தார்.

''கோகிலம்...!''

''ஸார்...!''

''இந்த ஃபோர்ட்டீன்-பி பில்புக்கை கொண்டா''

பில் புக் வந்தது.

சபாபதி லேபிளில் இருந்த எண்ணை ஒரு தடவை பார்த்துக் கொண்டு புக்கைப் புரட்டி கார்பன் வைத்து எழுதப்பட்ட அந்த பில்லைக் கண்டுபிடித்தார்.

''போன மாசம் பதினோராம் தேதி ஜிப்பாவையும் பைஜாமாவையும் ட்ரைவாஷுக்கு போட்டிருக்கார் ஸார்...''

''பேர்...?''

''அமல்ராஜ். அட்ரஸ்... நெம்பர் பதினேழு, தீப்தி அபார்ட்மெண்ட்ஸ், பாலகிருஷ்ணா நகர், ஆழ்வார் பேட்டை.''

சார்லஸ் கேட்டார்.

''இந்த அமல்ராஜை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது...! ரெகுலர் கஸ்டமராயிருந்திருந்தா கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்...''

''அமல்ராஜ் அட்ரஸை ஒரு துண்டு பேப்பர்ல எழுதிக் கொடுங்க. நான் அந்த அட்ரஸுக்குப் போய் என்கொய்ரி பண்ணிக்கறேன்..''

சபாபதி ஒரு துண்டு சீட்டில் அமல்ராஜின் அட்ரஸை குறித்துக் கொடுக்க, சார்லஸ் வாங்கிக் கொண்டு ஒரு நன்றியை உதிர்த்துவிட்டு ஜீப்புக்கு வந்தார்.

சில நிமிஷ பயணம்.

பாலகிருஷ்ணா நகரில் இருந்த தீப்தி அபார்ட்மெண்ட்டுக்கு முன்பாக ஜீப் போய் நின்றது.

ஆறு மாடிக் கட்டிடம். ஜீப்பைப் பார்த்ததும் அபார்ட்மெண்ட்டின் செக்யூரிட்டி வாட்ச்மேன் ஓடோடி வந்தான்.



''ஸார்...!''

சார்லஸ் ஜீப்பினின்றும் இறங்கிக்கொண்டே கேட்டார்.

''அமல்ராஜ் இந்த அப்பார்ட்மெண்ட்தானே...?''

''ஆமா ஸார்... ஃப்ளாட் நெம்பர் பதினேழு. வெளியூர்க்கு போயிருந்தவர் இப்பத்தான் பத்து நிமிஷத்துக்கு முந்திதான் வந்தார்... மேலே இருக்கார். போய்ப் பாருங்க ஸார்...''

சார்லஸ் திகைத்தார்.

''அமல்ராஜ் வெளியூர் போய்ட்டு இப்பத்தான் வந்தாரா?''

''ஆமா... ஸார்...''

சார்லஸ் மாடிப்படிகளை நோக்கி வேகமாய்ப் போனார்.

## 14

ஸிம்ஹா நெற்றியைத் தட்டிக் கொண்டே யோசனையோடு ராஜீவைப் பார்த்தாள்.

''என்னோட அத்தான் தயாரிக்கும் சினிமா டைரக்டர் விஜேஷுக்கும் என்ன தொடர்பு...?

ராஜீவ் ஷர்மிலியிடம் கேட்டான். ''சினிமா டைரக்டர் விஜேஷைப் பற்றி உங்க கணவர் உங்ககிட்ட ஏதாவது சொல்லியிருக்காரா...?''

''இல்லை...''

ராஜீவ் ஸிம்ஹாவிடம் திரும்பினான். ''விஜேஷையே நாம நேர்ல பார்த்து உங்களுக்கும் தயாரிக்கும் என்ன தொடர்புன்னு கேட்டுட வேண்டியதுதான்...''

ஸிம்ஹா மறுத்தலாய் தலையாட்டினாள்.

''விஜேஷ்கிட்ட நாம டைரக்டா போறது சரியில்லை... ராஜீவ்''

''பின்னே எப்படி...?''

''எனக்குத் தெரிஞ்ச ஃப்ரண்ட் ஒருத்தர் இருக்கார். அவர் பேர் ஹேமச்சந்திரன். ஹேமச்சந்திரனும் விஜேஷும் வெரிக்ளோஸ் ஃப்ரண்ட்ஸ்.''

''ஹேமச்சந்திரன் மூலமா மூவ் பண்ணிப் பார்க்கலாம்ன்னு சொல்ல வர்றீங்களா...?''

''ஆமா...''

"அந்த ஹேமச்சந்திரன் ஹெல்ப் பண்ணுவாரா?"

"ஷ்யூர்"

"இப்பவே போய்ப் பார்க்கலாமா...?"

"போய்ப் பார்க்க வேண்டாம். போன் பண்ணி வரவழைப்போம்..."

ஸிம்ஹா சொல்லிவிட்டு பக்கத்தில் இருந்த செல்போனைத் தொட்டு ஹேமச்சந்திரனை தொடர்பு கொண்டாள்.

"ஹேமா..! இப்ப... நீ ஃப்ரீயா....?"

"இல்லையே... பதினோரு மணிக்கு சி.எம்.மைப் பார்க்கணும். பனிரெண்டு மணிக்கு கவர்னரோடு லஞ்ச் சாப்பிட்டுக்கிட்டே ஒரு முக்கியமான டாப்பிக்கைப் பத்தி பேச வேண்டியிருக்கு. அப்புறம் ரெண்டு மணிக்கு டெல்லி ஃப்ளைட்டை பிடிக்கறேன். ஆறு மணிக்கு வாஜ்பாயோடு காஷ்மீர் மாநில சுயாட்சி பத்தி ஒரு டிஸ்கஷன்... அப்புறம் ஏழு மணிக்கு..."

"டேய்...! போதும்...! டயத்தை வேஸ்ட் பண்ணாதே...! அடுத்த அரை மணி நேரத்துக்குள்ளே நீ என்னை வந்து பார்க்கணும்..."

"இருபது நிமிஷம் போதும்... வந்துடறேன்... அட்ரஸ் சொல்லு..."

ஸிம்ஹா அட்ரஸ் சொல்லிவிட்டு ரிஸீவரை வைத்த பதினைந்தாவது நிமிடம் ஹேமச்சந்திரன் அவளுக்கு முன்பாய் இருந்தான். ஸிம்ஹாவின் முகத்தைப் பார்த்தே ஏதோ சீரியஸான விவகாரம் என்பதைப் புரிந்து கொண்ட ஹேமச்சந்திரன் தன் விளையாட்டுப் பேச்சை தள்ளி வைத்துவிட்டு கவலையோடு கேட்டான்.

"என்ன விஷயம் ஸிம்ஹா...?"

ஸிம்ஹா ஒரு ஐந்து நிமிடம் செலவழித்து எல்லாவற்றையும் சொல்ல, ஹேமச்சந்திரனின் முகம் திகைப்புக்குள் விழுந்து விழுந்து எழுந்தது. பிறகு கேட்டான்.

"இப்ப உனக்கு என்ன தகவல் வேணும் ஸிம்ஹா...?"

"சினிமா டைரக்டர் விஜேஷுக்கும் என் அக்காவோட கணவர் தயாநிதிக்கும் என்ன தொடர்புன்னு தெரியணும்... பொதுவா விஜேஷ் எப்படி....?"



"விஜேஷ் இப்பவும் எனக்கு நல்ல நண்பன்தான். திறமைசாலி. எந்தக் கெட்ட பழக்க வழக்கங்களும் இல்லாதவன். ஏதாவது பெரிய அளவில் பார்ட்டி நடக்கும்போது மட்டும் லிக்கரை 'சிப்' பண்ணுவான். அவனையும் கொலை செய்ய முயற்சி நடந்தது. அதிர்ஷ்டவசமா தப்பிச்சுட்டான். கொலை செய்ய வந்தவன் ஒரு இளைஞன். போலீஸ் அவனைத் தேடிக்கிட்டு இருக்கும்போதே அந்த இளைஞன் ஒரு ரோடு ஆக்ஸிடெண்ட்ல செத்துட்டான். அவனை அடையாளம் காட்டறதுக்காக இன்ஸ்பெக்டர் சார்லஸ் விஜேஷைக் கூப்பிட்டிருந்தார். விஜேஷ்கூட நானும் ஹாஸ்பிட்டலுக்குப் போனேன்..."

ராஜீவ் குறுக்கிட்டு கேட்டான். "கொலை செய்ய வந்தது அந்த இளைஞன்தானா...?"

"ஆமா..."

"அவன் யாரு...? எதுக்காக விஜேஷைக் கொலை பண்ண வந்தான்...?"

"அவன் யார்ன்னு தெரியலை. ஜிப்பா பாக்கெட்ல ஒரு நடிகையோட போட்டோ மட்டும் இருந்தது."

"எந்த நடிகையோட போட்டோ...?"

"ரூப்கலா..."

"ஆறு மாசத்துக்கு முன்னாடி தூக்க மாத்திரைகளை அதிகமா சாப்பிட்டு தற்கொலை பண்ணிக்கிட்ட நடிகையா...?"

"அவளேதான்..."

ராஜீவ் கைவிரலைச் சொடுக்கினான். "ஸிம்ஹா! இந்த கேஸ் இப்போ கொஞ்சம் புரிகிற மாதிரி இல்லை.?"

"என்ன புரியுது...? சொல்லுங்க..."

"தயாநிதிக்கும் விஜேஷுக்கும் பொதுவான எதிரிரோடு ஆக்ஸிடெண்ட்ல செத்துப்போன அந்த இளைஞன்தான். இவங்க ரெண்டு பேர் மேலேயும் அந்த இளைஞனுக்கு ஒரு கோபம் இருந்திருக்கு. அந்தக் கோபத்துக்கு முதல் பலி தயாநிதி. ரெண்டாவது பலியா விஜேஷை தீர்த்துக்கட்ட முயற்சி பண்ணி முடியாமே ஒரு ரோடு ஆக்ஸிடெண்ட்ல செத்துப் போயிருக்கான் அவன். அவன் யார்ன்னு தெரிஞ்சா எல்லா குழப்பமும் தெளிஞ்சுடும்..."

ஸிம்ஹூா ஹேமச்சந்திரனை ஏறிட்டாள்.

''இதோ பார் ஹேமா...! நீ விஜேஷை உடனே காண்டாக்ட் பண்ணி அவர்க்கும் என்னோட அக்காவின் கணவர் தயாநிதிக்கும் என்ன தொடர்புன்னு கேட்டு பதில் சொல்லணும்...''

''இந்த சுத்தி வளைக்கிற விஷயமே வேண்டாம் ஸிம்ஹூா... இதே நிமிஷம் நாம எல்லாரும் புறப்பட்டு விஜேஷை அவன் வீட்ல வெச்சே பார்க்கிறோம்... தயாநிதிக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு இருந்ததுன்னு கேட்டு மனம் விட்டு பேசறோம்.''

ராஜீவ் குறுக்கிட்டான். ''யூ... ஆர் கரெக்ட்! எதையுமே வெளிப்படையா பேசிடறது பெட்டர். ம்... கிளம்புங்க...''

எல்லோரும் எழுந்தார்கள்.

## 15

இன்ஸ்பெக்டர் சார்லஸ் தீப்தி அபார்ட்மெண்ட்டின் மாடிப்படிகளை இரண்டிரண்டாய் தாவி ஏறி பதினேழு என்று எண்ணிட்ட ஃப்ளாட்டுக்கு முன்பாய் வந்து நின்றார்.

கதவு சாத்தியிருந்தது.

தட்டினார். ''டொக்... டொக்...''

உடனே கதவு திறக்கப்பட லுங்கியும் பனியனுமாய் ஒரு இளைஞன் தெரிந்தான். சார்லஸின் காக்கி யூனிஃபார்ம் அவனைக் கலவரத்தில் வீழ்த்தியது.

''ஸ... ஸார்...!''

சார்லஸ் உள்ளே நுழைந்து கொண்டே கேட்டார்.

''உம் பேர் என்ன...?''

அவன் அவசரமாய் எச்சில் விழுங்கிவிட்டு சொன்னான்.

''அமல்ராஜ் ஸார்...''

''படிக்கிறியா...? வேலை பார்க்கறியா...?''

''வேலை பார்க்கிறேன் ஸார்...''

''எங்கே...?''

''அல்ட்டிமேட் கம்ப்யூட்டர் கம்பெனியில் ஜூனியர் எக்ஸிக்யூடிவா இருக்கேன் ஸார்...''

''வெளியூர் போய்ட்டு வந்தியா?''



''ஆமா... ஸார்...''

''எங்கே...?''

''ஒரு சாஃப்ட் வேர் ஸேல் பண்ற விஷயமா ஹைதராபாத் போய்ட்டு வந்தேன் ஸார்...''

சார்லஸ் தன் ஷர்ட் பாக்கெட்டில் வைத்திருந்த அந்த இளைஞனின் போட்டோவை எடுத்துக் காட்டினார்.

''ரோடு ஆக்ஸிடெண்டில் செத்துப்போன இவன் யார்ன்னு தெரியுதா...?''

போட்டோவைப் பார்த்த அமல்ராஜின் கண்களில் அதிர்ச்சி பரவியது.

''ஸ... ஸார்...! இ... இவன்...''

''சொல்லு...''

''ராஜாமணி ஸார்... என்கூடத்தான் தங்கியிருந்தான். அது அவனோட கட்டில்.. இந்த ஃப்ளாட்டுக்கு நாங்க ரெண்டு பேரும் சேர்ந்துதான் வாடகை கொடுத்துட்டிருந்தோம்...''

சார்லஸ் பார்வையைத் திருப்ப சுவரோரமாய்ப் போடப்பட்டிருந்த ராஜாமணியின் கட்டிலும் சுவரில் ஒட்டப்பட்டிருந்த நடிகை ரூப்கலாவின் போட்டோவும் தெரிந்தன.

''எப்ப ஸார் ஆக்ஸிடெண்ட் நடந்தது...?''

சார்லஸ் விபரம் சொல்லிவிட்டு கேட்டார்.

''ராஜாமணிக்கு இதே ஊரா...?''

''ராம்நாட் பக்கம் ஏதோ ஒரு கிராமம் ஸார்''

''ஃபேமிலி இருக்கா?''

''இல்ல ஸார்...! அவன் ஒண்டிக்கட்டை. சினி ஃபீல்டுக்கு போய் நிறைய சாதனைகளை பண்ணணும்ங்கிற கனவுகளோடு மெட்ராஸ் வந்தான் ஸார். அது முடியாமல் போகவே ஒரு பைனான்ஸ் கம்பெனியில் வேலை பார்த்துட்டிருந்தான்.''

சார்லஸ் மெல்ல நடந்து போய் கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த கப்போர்டைத் திறந்தார்.

நிறைய சினிமா மாத இதழ்கள். எல்லா இதழ்களின் அட்டைகளிலும் ரூப்கலாவின் போட்டோ.

சார்லஸ் அமல்ராஜிடம் கேட்டார்.

''இந்த நடிகைன்னா ராஜாமணிக்கு ரொம்பவும்

பிடிக்குமா...?''

''ரொம்பவும் க்ரேஸி ஸார்... ரூப்கலா தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப்போனபிறகுஆளேமாறிட்டான். சரியா வேலைக்கு போகாமே ரூப்கலாவோட போட்டோவையே வெறிச்சு பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருப்பான். ரூப்கலா இறந்துபோனது ஒரு ஞாயிற்றுக்கிழமை. அதனால ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மௌன விரதம் இருக்க ஆரம்பிச்சான். அவ போட்டோவுக்கு பூமாலைபோட்டு ஊதுவத்திகொளுத்திவெச்சான்.நான் திட்டினேன். அவன் அதைக் காதிலேயே போட்டுக்கலை.''

அமல்ராஜ்பேசிக்கொண்டிருக்க, சினிமா இதழ்ஒன்றை புரட்டிக் கொண்டிருந்த சார்லஸின் கரம் சட்டென்று நின்றது.

'அக்கம் பக்கம்' என்ற தலைப்பில் நிறைய சினிமா கிசுகிசு செய்திகள் தெரிய, ஒரு செய்தி மட்டும் சிவப்பு ஸ்கெட்ச் பேனாவால் கட்டம் கட்டப்பட்டிருந்தது.

சார்லஸ்படித்தார்.

அண்மையில் பத்து தூக்க மாத்திரைகளை ஒரேயடியாய் சாப்பிட்டு மீளாத நித்திரைக்குள் விழுந்துவிட்ட ரூபமான நடிகையின் மரணம் இன்னமும் மர்மமாகவே இருக்கிறது. நடிகை திடீரென்றுதற்கொலைசெய்துகொள்ளக்காரணம் என்ன என்பதை தோண்டிப் பார்த்தபோது கிடைத்தஒருவிஷயம்அதிர்ச்சியடைய வைத்தது.

பெயரில்வெற்றியை வைத்திருக்கும்சினிமா டைரக்டர்ஒருவர்நடிகையைவிருந்துக்குகூப்பிட்டு குளிர்பானத்தில்மயக்க மருந்து கலந்து கொடுத்து நடிகைக்குத்தெரியாமலேயே மூன்று மணிநேரம் ஓடக்கூடிய பலானபடம்ஒன்றை எடுத்துவிட்டார். அரபு நாடுகளுக்கு கலை நிகழ்ச்சி நடத்தச் சென்ற ரூப நடிகை அங்கே தன் பலான படம் வீடியோ டெக்குகளில் ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ந்து போனாராம். நடிகை கொந்தளித்துப் போய் நியாயம்கேட்டு 'வி' டைரக்டரிடம்போக



அவர்தன்அரசியல்செல்வாக்கை வைத்து மிரட்ட மனம்நொந்துபோனநடிகைதூக்க மாத்திரைகளின் உபயத்தால்யாத்திரைபோய்விட்டார்.

''அமல்ராஜ்...!''

''ஸார்...!''

''இந்த 'கிசுகிசு'வை நீ படிச்சுப் பார்த்தியா...?''

அமல்ராஜ்வாங்கிப் பார்த்துவிட்டு சொன்னான்.

''ராஜாமணி இதை என்கிட்ட காட்டி யார் இந்த 'வி' டைரக்டர்ன்னு கேட்டான். எனக்குத் தெரியலைன்னு சொன்னேன். அதுக்கு அவன் இது டைரக்டர் 'விஜேஷ்'தான்னு சொன்னான்.''

''அவரைப் பழி வாங்கப்போறதா சொன்னானா...?''

''அப்படியெல்லாம் ஏதும் சொல்லலை...''

சார்லஸ்மறுபடியும் ராஜாமணிபோட்டோவை காட்டி கேட்டார்.

''ராஜாமணி போட்டிருக்கிற இந்த ஜிப்பா, பைஜாமா உன்னோடதுதானே...?''

''ஆமா... ஸார்... ட்ரை வாஷ்க்கு போய்ட்டு வந்த என்னோட ட்ரஸ்ஸை ராஜாமணி உரிமையோடு எடுத்து போட்டுக்கறதும் உண்டு...''

சார்லஸ் ராஜாமணியின் கப்போர்டை மேலும் சில நிமிஷங்கள் செலவழித்து கிளறிப் பார்க்க-

அந்த போஸ்ட் கார்ட் சைஸ் போட்டோ கைக்கு கிடைத்தது.

போட்டோ முழுவதும் குண்டூசிகள் நெருக்கமாய் குத்தப்பட்டிருக்க-

முகம் தெரியவில்லை.

ஒவ்வொருகுண்டூசியாய்எடுக்கஆரம்பித்தார்சார்லஸ்.

## 16

''தயாநிதியா...? அப்படி யாரையும் எனக்குத் தெரியாதே''

விஜேஷ் தோள்களைக் குலுக்கிஇரண்டுகைகளையும் விரித்தபடி சொல்ல-எதிரில்உட்கார்ந்திருந்தஸிம்ஹாவும் ராஜீவும் ஒருத்தரையொருத்தர் குழப்பமாய் பார்த்துக்

கொண்டார்கள்.

பக்கத்தில் இருந்த ஹேமச்சந்திரன் விஜேஷின் தோளைத் தட்டினான்.

''விஜேஷ்...! நல்லா யோசனை பண்ணிச் சொல்லு. 4545454 உன்னோட பழைய டெலிபோன் நெம்பர் தானே...?''

''ஆமா...''

''அந்த நெம்பரிலிருந்துதான் யாரோ பேசி தயாநிதியைக் கேட்டிருக்காங்க...''

விஜேஷ் சிரித்தான்.

''என்னோட பேரைக் கெடுக்கிறதுக்காக யாரோ பண்ணின வேலை இது...தயாநிதிங்கிற பேர்ல யாரையும் எனக்குத் தெரியாது. தெரிஞ்சிருந்தா தெரியும்ன்னு சொல்லிட்டு போறேன். இதுல எனக்கென்ன பயம்...?''

ஸிம்ஹா கேட்டாள்.

''சரி... உங்களை கொலை பண்ண வந்தவன் என்ன காரணத்துக்காக கொலை பண்ண வந்தான்னு சொல்ல முடியுமா...?''

''அவன்கிட்ட காரணம் கேட்டேன். அவன் சொல்லலை. சொல்லவும் அவனால முடியாது. ஏன்னா நான் யார்க்கும் எந்தக் கெடுதலும் பண்ணலை. இந்த சினி ஃபீல்டில் எனக்கு என்ன வேலையோ அதை ஒழுங்கா பார்த்துக்கிட்டிருக்கேன். நான் ஒரு சக்சஸ்ஃபுல் டைரக்டரா இருக்கிறது யார்க்கும் பிடிக்கலை... அதான் என்னைத் தீர்த்துக்கட்ட யார் யாரையோ ஏவி விடறாங்க... என் பக்கம் நியாயம் நேர்மை இருக்கிற காரணத்தினால தான் உங்களுக்கு முன்னாடி உட்கார்ந்து உயிரோடு பேசிக்கிட்டிருக்கேன்.''

ராஜீவ் இடைமறித்துக் கேட்டான்.

''தயாநிதி கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கும் உங்களை கொலை செய்ய நடந்த முயற்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லைன்னு சொல்றீங்களா...?''

''சர்ட்டன்லி...! தயாநிதி எந்தக் காரணத்துக்காக கொலை செய்யப்பட்டார்ன்னு எனக்குத் தெரியாது. அந்த சம்பவத்துக்கும் எனக்கும் நீங்க முடிச்சு போட்டுக்கிட்டு உங்களைக் குழப்பிக்க வேண்டாம்...''



விஜேஷ் பேசிக்கொண்டிருக்கும்போதே-

போர்டிகோவில் வாகன சத்தம் கேட்டது. ஹேமச்சந்திரன் ஜன்னல் வழியாக போர்டிகோவை எட்டிப்பார்த்து விட்டு விஜேஷிடம் சொன்னான்.

''இன்ஸ்பெக்டர் சார்லஸ் வந்துட்டிருக்கார்...''

விஜேஷ் புன்னகைத்தான். ''அவரும் நல்ல சமயத்துக்குத்தான் வந்திட்டிருக்கார். என்னைப்பத்தி நல்லா தெரிஞ்சவர் அவர். உங்க சந்தேகங்களை நீங்க அவர்கிட்டயே கேட்டுக்கலாம்.''

அடுத்த சில விநாடிகளில் - மாடிப்படிகளில் ஷூ சத்தம் கேட்டு பின் சார்லஸ் உள்ளே வந்தார். ஷோபாக்களில் பரவியிருந்த அந்த சின்ன கும்பலைப் பார்த்து திகைக்க, விஜேஷ் சிரித்துக்கொண்டே ''வாங்க சார்லஸ்...'' என்று வரவேற்று எல்லோரையும் அறிமுகப்படுத்தி வைத்து விட்டு அவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள் என்பதையும் சொல்ல சார்லஸ் ஒரு நாற்காலிக்கு தன்னைக் கொடுத்துக் கொண்டே ஷர்மிலியிடம் கேட்டார்.

''உங்க கணவர் தயாநிதி என்ன பிஸினஸ் பார்த்துக்கிட்டு இருந்தார்....?''

''ரியல் எஸ்டேட் பிஸினஸ் பார்த்திட்டிருந்தார்.''

''உங்களுக்கு போன பேசிய நபர் டெலிபோன் என்னைச் சொன்னபோது பேப்பர்ல ஏதும் குறிச்சு வெச்சீங்களா?''

''இல்லை...''

''ஏன்...?''

''ஞாபகத்துல வெச்சுக்கறமாதிரி டெலிபோன் நெம்பர். ரொம்பவும் ஈஸியா இருந்தது.''

''நெம்பர் மாறியிருக்க வாய்ப்பிருக்கே...?''

''வாய்ப்பு கிடையாது. ஏன்னா நான் ரெண்டு தடவை நெம்பர் கேட்டு அதை கன்ஃபர்ம் பண்ணிக்கிட்டேன்.''

சார்லஸ் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு பின் ஷர்மிலியிடம் கேட்டார்.

''உங்களுக்கு ராஜாமணின்னு யாரையாவது தெரியுமா...?''

''ராஜாமணி...?''

''ம்...''
''உங்கள்ல யாருக்காவது தெரியுமா...?'' சார்லஸ்
ஸிம்ஹாவையும் ராஜீவையும் பார்த்துக் கேட்டார்.
''யார்ன்னு தெரியலையே...?''
''இந்தப் போட்டோவைப் பாருங்க...'' மார்ச்சுவரியில்
எடுக்கப்பட்ட ராஜாமணியின்போட்டோவைக்காட்டினார்
சார்லஸ். ''இவன்தான்ராஜாமணி. விஜேஷைக் கொலை
செய்ய வந்தவன். ரோடு ஆக்ஸிடெண்ட்ல இப்போ
உயிரை விட்டு மார்ச்சுவரியில் கிடக்கிறான்...! மிஸஸ்
ஷர்மிலி! உங்க கணவர் தயாநிதிக்கும் இந்த ராஜாமணிக்
கும் ஏதாவது பகை இருக்கும்ன்னு நினைக்கறீங்களா?''
''எனக்குத் தெரியலை...''
''பகை இருக்க வாய்ப்பில்லை. ஏன்னா இந்த
ராஜாமணியோட கோபம் பூராவும் விஜேஷ் மேல
மட்டும்தான். விஜேஷை அவன் ஏன் கொலை செய்ய
வந்தான்ங்கிறதுக்கான மோட்டீவும் இப்போ
கிடைச்சிருக்கு.''
விஜேஷ் ஒரு சின்ன திடுக்கிடலோடு நிமிர்ந்தான்.
''என்ன மோட்டீவ் சார்லஸ்?''
''இந்த சினிமா 'கிசு கிசு' நியூஸை கொஞ்சம் படிச்சு
பாருங்க... ராஜாமணி கிட்ட இருந்தது.''
வாங்கிப் படித்தான் விஜேஷ். படித்துமுடித்ததும் அவன்
உதட்டில் ஒரு பெரிய புன்னகை உட்கார்ந்தது.
''பொழுது போகாத பொறாமைக்காரன் எவனோ
ஒருத்தன் எழுதியிருக்கான். நடிகை ரூப்கலாவை
மயக்கப்படுத்தி நான் ப்ளூஃபிலிம் எடுக்க வேண்டிய
அவசியம் இல்லை. பணம் சம்பாதிக்க எனக்கு
எத்தனையோ நல்ல வழிகள் தெரியும். இப்படிப்பட்ட
ஈனமான இழி செயலை பண்ணி பணம் சம்பாதிக்க
வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.''
''அப்படீன்னா இந்த கிசு கிசு பொய்?''
''அப்பட்டமான பொய். இந்த பொய்யான கிசுகிசுவைப்
படிச்சுட்டுத்தான் ராஜாமணிக்கு என்மேல கோபம்
வந்திருக்கணும்... வீண் வதந்திகளைக் கிளப்பிவிடுகிற
இதுமாதிரியான பத்திரிக்கைகளை தடை செய்யணும்...''
''ஸாரி மிஸ்டர் விஜேஷ்...!'' ஸிம்ஹாவிடமிருந்து



எழுந்த இந்த உரத்த குரலைக் கேட்டதும் எல்லோரும்
திடுக்கிட்டுப் போய்ப் பார்க்க - விஜேஷ் அதிர்ச்சியாய்ப்
பார்த்தான்.
ஸிம்ஹா ஒரு சின்ன புன்னகையோடு தொடர்ந்தாள்.
''மிஸ்டர் விஜேஷ்...! நீங்க இதுவரைக்கும் பேசினது
எல்லாமே பொய். பொய்ன்னா சாதாரண பொய் கிடையாது.
பச்சைப் பொய்.''
விஜேஷ் வெகுண்டான்.
''வாட் டூ யூ மீன்...? நான் பேசினது பொய்யா...?''
''எஸ்... பொய்தான்... உங்களுக்கும் என் அக்காவோட
கணவர் தயாநிதிக்கும் தொடர்பு இல்லைன்னு சொன்னது
பொய். உங்களுக்கும் அவர்க்கும் நெருங்கிய தொடர்பு
இருந்திருக்கு.''
''நோ...!''
''எஸ்...''
சார்லஸ் குறுக்கிட்டார்.
''மிஸ் ஸிம்ஹா...! தயாநிதிக்கும் விஜேஷுக்கும்
தொடர்பு இருக்குன்னு நீங்க சொல்றீங்க. அதுக்கு ஏதாவது
ஆதாரம் இருக்கா...?''
''ஆதாரம் இல்லாமே பேச எனக்கென்ன பைத்தியமா
பிடிச்சிருக்கு...? இதோ!'' என்று சொன்ன ஸிம்ஹா தன்
தோளில் தொங்கிக் கொண்டிருந்த வானிடி பேக்கைத்
திறந்து ஒரு ப்ரௌன் நிற கவரை எடுத்து நீட்டினாள்.
சார்லஸ் அந்தக் கவரை வாங்கி வாயை ஊதி திறக்க
உள்ளே ஒரு போட்டோ.
எடுத்தார்.
போட்டோவில் செடி கொடிகள் சூழ்ந்த இடத்தில்
பக்கம் பக்கமாய் நின்றுகொண்டு விஜேஷும் தயாநிதியும்
பேசிக் கொண்டிருந்தார்கள்.
சார்லஸ் அந்த போட்டோவை மௌனமாய் விஜேஷுக்
குக் காட்ட விஜேஷின் முகம் கோபத்தில் ஜொலித்தது.
போட்டோவை கிழித்துவிட்டு ஆவேசமாய் எழுந்தான்.
''யூ... நாஸ்ட்டி பிட்ச்...''
சார்லஸ் தடுத்தார்.
''பொறுங்க விஜேஷ்... எதுக்காக இந்த கோபம்...?
போட்டோவில் இருக்கிறது நீங்கதானே...?''

''இல்ல... இது ஏதோ... ஜிம்மிக்ஸ் வேலை.''
ஸிம்ஹா சிரித்தாள்.
''அந்தவேலையெல்லாம் உங்களுக்குத்தான்தெரியும்.
மிஸ்டர் விஜேஷ்... இந்த போட்டோவை எடுத்தது
நான்தான். எப்ப எடுத்ததுன்னு கேட்கறீங்களா...? மூனு
மாசத்துக்கு முந்தி ஒரு நாள் ஃபாரினிலிருந்து ஒரு
ப்ராஜக்ட் விஷயமா மெட்ராஸுக்கு வந்தேன். என்னோட
வருகையை சஸ்பென்ஸா வெச்சிருந்து அக்காவுக்கு
முன்னாடி திடீர்ன்னு வந்து நிக்கணும்ங்கிற ஆசையில்
அக்காவுக்கு தெரியப்படுத்தலை. நான் ஏர்போர்ட்டி
லிருந்து திரும்பும்போது ராத்திரி ஒன்பது மணி.
கிண்டிக்குப் பக்கத்தில் டாக்ஸி வந்தபோது சிக்னலுக்காக
ஒரு நிமிஷம் வெயிட் பண்ண வேண்டி வந்தது. டாக்ஸி
யில் உட்கார்ந்து வெளியே வேடிக்கை பார்த்துக்கிட்
டிருந்தபோதுதான் இந்த இருட்டான ரோட்டோர
பூங்காவுக்கு பக்கத்துல என் அக்காவின் கணவர் தயாநிதி
யாரோ ஒரு பெண்ணை உரசின மாதிரி நின்னுக்கிட்டு
பேசிட்டிருந்தார். அந்தப் பெண் யார்ன்னு தெரிஞ்சுக்
கிறதுக்காக டாக்ஸியை கட் பண்ணி அனுப்பிட்டு அவரை
அப்ஸர்வ் பண்ணினேன். அந்தப் பெண் பேசிட்டு போன
கொஞ்ச நேரத்துக்குள்ளே ஒரு கார் வந்து தயாநிதிக்குப்
பக்கத்தில் நிற்க விஜேஷ் கீழே இறங்கினார். ரெண்டு
பேரும் திருட்டு பார்வை பார்த்துக்கிட்டு செடி கொடிகள்
பக்கமா போனாங்க. நான் ஃபாலோ பண்ணினேன்.
அவங்க உள்ளே போய் மறைவா நின்னுகிட்டு
பேசினாங்க. அவங்க பேச்சை கேட்க கேட்க உடம்
பெல்லாம் தீப்பற்றி எரிஞ்ச மாதிரி இருந்தது...''
அனைவரும் உறைந்து போயிருக்க சார்லஸ் மட்டும்
கேட்டார்.
''அவங்க என்ன பேசிக்கிட்டாங்க...?''
''நடிகைகளை ப்ளூ ஃபிலிம் எடுத்து எடுத்து சலிச்சு
போச்சாம். அதுக்கு இப்போ அரபு கண்ட்ரீஸ்ல வேல்யூ
இல்லையாம். குடும்பப் பெண்களை வெச்சு பி.எஃப்
எடுத்தா நல்ல விலை கிடைக்குமாம்.''
விஜேஷ் வியர்த்து வழிந்து கொண்டிருக்க - ஸிம்ஹா
தொடர்ந்தாள்.



''குடும்பப் பொண்ணுக்கு எங்கே போறதுன்னு தயாநிதி
கேட்க, விஜேஷ் உன் பொண்டாட்டியை வெச்சு ஃபிலிம்
பண்ணு. ரெண்டு மடங்கு பணம் தர்றேன்னு சொன்னார்.
ஷர்மிலி இதுக்கு ஒத்துக்கமாட்டாள்ன்னு தயாநிதி
சொல்ல விஜேஷ் சிரித்தார். ரூப்கலாவை மயக்கப்படுத்தி
பி.எஃப் எடுத்த மாதிரி உன் பொண்டாட்டியையும் எடுக்க
வேண்டியதுதானே... இதையெல்லாம் உனக்கு
சொல்லியா கொடுக்கணும்? மொதல்ல உன் பொண்டாட்டி
ஷர்மிலியை பி.எஃப் பண்ணு- அதுக்கப்புறம் உன் மச்சினி
ஸிம்ஹா ஃபாரினிலிருந்து வந்ததும் அவளையும் பி.எஃப்
பண்ணு. பணத்தைக் கொட்டி குவிச்சுடறேன்...''
''பொ... பொய்...!'' விஜேஷ் கத்திக் கொண்டே ஸிம்ஹா
மேல் பாய முயல-
ஸிம்ஹா விருட்டென்று வானிடி பேக்கிலிருந்து அந்த
ரிவால்வரை எடுத்தாள்.
''இனி உனக்கு மரியாதை கிடையாது...! நீ பண்ணின
அயோக்கியத்தனத்துக்கெல்லாம் என் அக்கா புருஷன்
பார்ட்னரா இருந்த ஒரே பாவத்துக்காக நான்தான் விஸ்கி
பாட்டிலில் விஷத்தைக் கலந்து ஹார்ட் அட்டாக்
வரும்படியா செஞ்சு கொலை பண்ணினேன். என்
அக்காவோட மானத்தையும் மத்த குடும்பப் பெண்களோட
மானத்தையும் காப்பாத்த எனக்கு வேற வழி தெரியலை.
அக்கா ஷர்மிலி கோயிலுக்குப் போகும்போது வீட்டை
பூட்டி சாவியை நிலைப்படிக்கு மேல் வெச்சுட்டு போற
பழக்கம் உண்டு. அந்த நேரத்தை நான் விஷம் கலக்க
உபயோகப்படுத்திக்கிட்டேன். அக்கா விதவையானாலும்
பரவாயில்லை. மானம் போயிடக்கூடாதுங்கிற ஒரே ஒரு
காரணத்துக்காக தயாநிதியை கொலை பண்ணிட்டு வந்த
சுவடு தெரியாமே ஃபாரின் கிளம்பிப் போயிட்டேன்.
தயாநிதியோட மரணம் பற்றிய தகவல் எனக்கு வரும்ன்னு
நினைச்சேன். அக்கா என்னோட படிப்பைக் கருதி எனக்கு
தகவல் கொடுக்கலை. நானும் அதை கண்டு கொள்ளாமல்
இருந்துட்டேன். மெட்ராஸ் திரும்பியதும் தகுந்த சமயம்
பார்த்து விஜேஷையும் கொலை பண்ண மனசுக்குள்
திட்டம் போட்டிருந்தேன். விஜேஷை தீர்த்துக்கட்ட
இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கும்ன்னு நான் கொஞ்சம்கூட

நினைச்சுப் பார்க்கலை.''

துப்பாக்கியை உயர்த்தி விஜேஷைக் குறி பார்த்தாள் ஸிம்ஹா.

சார்லஸ் கத்தினார்.

''நோ...ஸிம்ஹா... நோ...''

''ஸாரி... இன்ஸ்பெக்டர்...!. அந்த இளைஞன் ராஜாமணியின் ஆத்மா சாந்தி அடையவும் என் மனம் சந்தோஷப்படவும் இந்த இந்தியாவில் இருக்கிற எல்லா குடும்பப் பெண்களின் சார்பாகவும்... இந்த துப்பாக்கியில் இருக்கிற அத்தனை தோட்டாக்களையும் விஜேஷ் என்கிற பெயருள்ள இந்த மிருகத்துக்கு பரிசாக அளிக்கிறேன்.''

சுட்டாள் ஸிம்ஹா.

ஆறு முறை.

(முற்றும்)


**க்ரைம் நாவல்**

**சந்தா விவரம்**

ஓராண்டுச் சந்தா: ரூ.60.00

அரையாண்டுச் சந்தா: ரூ.30.00



ஜியே பப்ளிகேஷனுக்காக ஜியே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி.அசோகன். முகவரி: 333, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.

ஆசிரியர்: ஜி.அசோகன். தொலைபேசி: 8571526, 8544294


## டிரங்க்கால்

(2 ஆம் அட்டைத் தொடர்ச்சி)

அரட்டை, விளக்கம் ப்ளீஸ் விவேக் இந்த இரண்டையும் நான் எழுதுவதால் எனக்கு எல்லாமே தெரிந்திருக்கும் என்று வாசகர்கள் நினைப்பது தவறு. கற்றது உள்ளங்கை அளவுதான். எனக்குத் தெரியாத பல விஷயங்கள் கடலளவு உள்ளன. சென்ற மாதம் ஒரு வாசகர் இரவு பதினோரு மணிக்கு எனக்கு போன் செய்து தன் சகோதரி தீ விபத்தில் இறந்து விட்டதாகவும் அந்த மரணத்தில் தனக்கு சந்தேகம் இருப்பதால் என்னை உடனடியாய் தன்னுடைய கிராமத்துக்கு வந்து உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவி செய்ய வேண்டும் என்றும் சொன்னார். இது அந்த வாசகர் போலீஸில் சொல்ல வேண்டிய விஷயம். இப்படி நிறைய டெலிபோன் கால்கள்.

''இனிமே வாசகர்கள் புரிஞ்சுக்குவாங்க ஸார்....''

''யாரு... இவ்வளவு ஆறுதலா பேசறது?''

''குருவாயூர் கண்ணன் ஸார்''

''சிவகங்கை குருவாயூர் கண்ணன்தானே?''

''ஆமா ஸார்....''

''ரொம்ப நன்றி கண்ணன்...''

''எதுக்கு ஸார்...?''

''நீங்க அனுப்பி வெச்ச 'ரஜினி ராஜ்யம்' புத்தகத்துக்கு''

''இதுக்குப் போய் நன்றி சொல்லணுமா ஸார்?''

''ஆயிரம் தடவை நன்றி சொல்லலாம்...''

''உங்ககிட்ட நான் ஒரு சின்ன கோரிக்கை வைக்கலாமா ஸார்...?''

''பெரிய கோரிக்கையாகவே வைக்கலாம் கண்ணன்''

''இதான் ஸார் கோரிக்கை. விவேக், கோகுல்நாத் இல்லாமே ரூபலா மட்டும்....''

''ரூபலா மட்டும்...?''

''துப்பறிகிற மாதிரி ஒரு நாவல் வேணும்''

''இதுதானே உங்க ஆசை... பிடியுங்க தலைப்பை''

''சொல்லுங்க... சொல்லுங்க...''

**''பத்து விநாடி ஆபத்து.''**

''டொக்!''

மிக்க அன்புடன்

**ராஜேஷ்குமார்.**